(10)

# நடேசன், 'திரு' ஆலோசனையும் பெறவேண்டும்

Registered as a News Paper in Ceylon  விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49

போன் : 389

மலர் 12

இதழ் 167

தேசிய தினசரி

யாழ்ப்பாணம்  ஆடி 12  ஜமா. அவ் 23  செவ்வாய்க்கிழமை  [28-7-70]

ஈழநாடு சந்தா

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும். தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

## செனட்டில் றெஜி பெரேரா வற்புறுத்தல்

### '29-வது ஷரத்தை நீக்கவேண்டும்'

கொழும்பு, திங்கள்

'புதிய அரசியல் திட்டத்தை தயாரிக்கும்போது செனட்டர்கள் விஜயமானே, திருச்செல்வம், நடேசன் போன்ற சட்டவல்லுனர்களின் ஆலோசனைகளும் பயன்படவேண்டும். அதற்காக ஒருவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க விரும்புகிறேன்' என்று செனட்டர் றெஜி பெரேரா இன்று செனட்சபையில் தெரிவித்தார்.

அரசியல் நிர்ணயசபை மீதான விவாதம் இன்று செனட்சபையில் ஆரம்பமானது செனட்சபைத்தலைவர் திரு இரத்தினயக்கா தலைமையில் இன்றுசபை கூடியது

அரசியல் நிர்ணய சபை மீதான பிரேரணை ஏகமனதாக நிறைவேறியதற்கு எதிர்க்கட்சிகள் கொடுத்த ஆதரவுக்கு றெஜி பெரேரா அரசாங்கதரப்பில் பாராட்டைத்தெரிவித்தார்

செனட்டர் பெரேரா இங்கு பேசியதாவது: ஒவ்வொரு அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களும் தங்கள்தங்கள் அபிப்பிராயங்களை தெரியப்படுத்துவதால் புதிய கருத்துக்கள் பிறக்கின்றன. பலதரப்பட்ட கட்சிகளின் கருத்துக்களும் வெளியிடப்படுவதினால் நன்மை பயக்கும்.

தற்போதைய அரசியல் அமைப்பில் உள்ள 29-ம் ஷரத்தை நீக்க வேண்டும், நாட்டின் முன்னேற்றத்துக்கு இது பெருமளவு தடையாக எள்ளது, எமது நாட்டு மக்களின் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்துமளவுக்கு இது அமைந்துள்ளது.

புதிய அரசியல் அமைப்புத்திட்டத்தில் சிறுபான்மையினரின் உரிமைகள் தக்க முறையில் பாதுகாக்கப்பட வேண்டும். சிறுபான்மையோருக்குள உள்ள சிறுபான்மையோரின் உரிமைகளும் தக்கபடி பாதுகாக்கப்பட வேண்டும். புதிய அரசியல் திட்டத்தில் சில விதிகளை புகுத்திவிட்டால் மட்டும் போதாது. இவை சரியான முறையில் அமுல்நடத்தப்படுகிறதா என்று பார்த்து பரிகாரம் காணும் உரிமையும் நீதிமன்றங்களுக்கு வழங்கப்படவேண்டும்' என்றுர்

செனட்டர் கல்பகே பேசுகையில். எம் பிக்களின் சொத்துவிபரங்களை வெளிப்படுத்தும் சட்டத்தைக் கொண்டுவர தற்போதைய அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றுர்

செனட்சபை மீண்டும் ஆகஸ்ட் மாதம் 5-ம் திகதி மாலை 2-30 மணிக்கு கூடும்.

# 21 தினத்தின் பின் மாவைக்கந்தன் பூஜைகள் மீண்டும் ஆரம்பம்!

## பொலிசார் வாபஸ்

## ஆடித்தீர்த்தமும் நடக்கும்

மாவிட்டபுரம், திங்கள்

மாவைக்கந்தன்ஆலயக் கதவுகள் இருபத்தொரு நாட்களுக்குப்பின் இன்று திறக்கப்பட்டதுடன், இரண்டாம் வீதிக்கதவுகளில் காவல் இருந்த பொலிஸாரும் வாபஸாஞர்கள்.

மாவை ஆலயத்தில் பிராயச்சித்தம் நடந்து கொண்டிருக்கிறது. இன்று காலை 8-30 மணியளவில் ஆலய மணி ஒலிக்கக் கேட்டதும் சுற்றுடலிலுள்ள மக்கள் 'அரோகரா' கோஷத்துடன்ஆலயத்துக்கு வந்து வழிபட்டனர்.

பொலிஸார் வெளியேறியதையடுத்து ஆலய கதவுகள் திறந்துகொண்டனர். ஆலயத்தினுள் காவல் புரிந்து கொண்டிருந்த பொலிஸார் இப்போது மாவிட்டபுரத்திலுள்ள தற்காலிக பொலிஸ் நிலையத்தில் இருக்கின்றனர்.

### பிரதம குரு கூறுகிறுர்

மாவை ஆலய தர்மகர்த்தா பிரமஸ்ரீ துரைச்சாமிக் குருக்கள் நமது நிருபரிடம் இன்று கூறியதாவது:

பிராயச்சித்தத்தை அடுத்து வழமையான பூசை நடக்கும். கும்பாபிசேகத்திருவிழா தொடர்ச்சியாக நடைபெறும். ஆடி அமாவாசைக்கு மூர்த்தி கீரிமலையில் எழுந்தருளுவார்.

மாவை ஆலய வீதியிலுள்ள தற்காலிக பொலிஸ் நிலையத்தில் பொலிசார் தொடர்ந்து கடமையாற்றி வருவர். ஆடி அமாவாசைத் தீர்த்தத்தன்று வழமைபோல் வாகனப்போக்குவரத்து ஏற்பாடுகள். வழிபடுவோருக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பொலிசாரால் கவனிக்கப்படுமென்று பொலிஸ் அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

## சம்ரோச்சனை

## பூசை நடக்கும்போது மட்டும் கதவுகள் திறக்குமாம்

மாவிட்டபுரம், திங்கள்

இருபத்தொரு நாட்கள் பூசையில்லாமலிருந்த மாவை ஆலயக்கதவுகள் திறக்கப்பட்டதை அடுத்து 'சம்ரோச்சனை' கும்பாபிசேகம் இன்று இரவு ஆரம்பமாகிறது. இக்கும்பாபிசேக கிரியைகள் 5 நாட்கள் நடைபெறவிருக்கின்றன இருபத்தொரு நாட்கள் கதவுகள் பூட்டப்பட்டதாலேயே இக்கும்பாபிசேகம் நடாத்தப்படவுள்ளது இன்றுகார்த்திகைத் திருவிழா நடக்காதபோதும் வழமைபோல் பக்தர்கள் மாவிளக்குப்போட்டு தமது நேர்த்திக்கடன்களை பூர்த்தி செய்தனர். மாவை ஆலயத்தைச்சுற்றிச்சென்ற7 ம்திகதி கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடிகள் [illegible] பட்டன. மாவை ஆலயத்தில் அமைதி நிலவுகிறது.

### துண்டுப்பிரசுரம்

மாவை முருகன் வழிபடுவோர் சங்கம், அகில இலங்கை வேதாகம சைவசித்தாந்தசபை, அகிலஇலங்கை சைவ அனுட்டானபாதுகாப்புச்சபை மாவை முருகன் தொண்டர்சபை ஆகியன ஒன்று சேர்ந்து ஒருதுண்டுப் பிரசுரம் வெளியிட்டுள்ளன. கடந்த 20 தினங்களாக இராஜதம், பைலிகம் காரணமாக மாவை முருகன் ஆலயத்தில் நித்திய நைமித்தியங்கள் தடைப்பட்டு அவல நிலை ஏற்பட்டிருந்தன. அந்நிலை நீங்கி இம்மாதம் 29-ந் திகதி காலை 8 மணி 50 நிமிடமளவில் சர்வ சன்டபாப பிராயச்சித்தசம்ரோச்சனம் [illegible] அறிவிக்கப்

### பெற்ரோலியம் கூட்டுத்தாபனம்

## ஊழியருக்கு இலவச வைத்திய வசதி

கொழும்பு திங்கள்

பெட்ரோலியம் கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் தொழிலாளர் சேம நல காப்புறுதித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட விருப்பதாக பெட்ரோலியம் கூட்டுத்தாபன தலைவர் திரு ஈ, ஆர், எஸ். குமாரசாமி தெரிவித்துள்ளார்,

இந்தச் சேமநலத் திட்டத்தின் மூலம் தொழிலாளர் குடும்பங்களுக்கு குறைந்தது 5 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்குமென்றும் எதிர்பார்க்கப்படுசிறது,

தொழிலாளர்களும் அவர்களதுகுடும்பத்தினரும்வைத்திய பரிசோதனையை தாம் விரும்பிய வெளிவைத்தியர்களைக்கொண்டு செய்விக்க வசதி செய்துகொடுக்கப்படுவதுடன்அதற்கான செலவுகளையும் வழங்க கூட்டுத்தாபனம் ஆலோசித்து வருகிறது தொழிலாளரின் வசதியை முன்னிட்டு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமனம் செய்யவும் கூட்டுத்தாபனத்தலைவர் யோசனை செய்துவருகிறுர். காப்புறுதித் திட்டத்தின் மூலம்3000 தொழிலாளர் வசதிபெற வாய்ப்பு ஏற்படும்.

# "வாடிக்குச்சென்று மூன்றுபேரும் வெட்டப்பட்டுவிட்டதாகச்சொன்னேன்"

## மாங்குளம் முக்கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், செவ்

''நான் வாடிக்குப்பே ய்,

இவ்வழக்கு நேற்று இரண்டாவது தினமாக வடபகுதி

வில்லை? இல்லை.

வழ; வேறு ஒருவரும் சத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிக்கக் கேட்டதும் சுற்றுடலிலுள்ள மக்கள் 'அரோகரா' கோஷத்துடன்ஆலயத்துக்கு வந்து

த்தா பிரமஸ்ரீ துரைச்சாமிக் குருக்கள் நமது நிருபரிடம் இன்று கூறியதாவது: பிராயச்சித்

வரத்து ஏற்பாடுகள். வழிபடுவோருக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பொலிசாரால் கவனிக்கப்படுமென்று பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சென்னர். மாவை ஆலயத்தைச்சுற்றிச்சென்ற7 ம்திகதி கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடிகள் இன்று அகற்றப்

திகதி காலை 8மணி 50நிமிடமளவில் சர்வ சங்...ப் பிராயச்சித்தசம்ரோச்சனம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது

# சம்ரோச்சன கும்பாபிஷேகம்

மாவிட்டபுரம், திங்கள் பொலிசார் காவல் புரிந்த இரும்புக் கதவுகள் இன்று காலை திறக்கப்பட்ட சில மணி நேரத்தின்பின் சாத்தப்பட்டன. முன்னர்போல் பூட்டுப் போடப்படவில்லை பூசை நடக்கும் நேரத்தில் மட்டும் இக் கதவுகள் திறக்கப்பட்டு பக்தர்கள் செல்ல அனுமதிக்கப்படுவர் என கோயில் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐயர் வீட்டுக் கதவுகள் மேற்குவாசல் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. உத்தரவின்றி பிரவேசிக்க வேண்டாம் என்றுஅறிவிப்பு இந்த வாசல்களில் போடப்பட்டுள்ளன.

இரும்புக்கதவு வாசலில் இந்த அறிவிப்பு இல்லை.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன்சுவாமி தேவஸ்தானத்தில் 2-ம் திருவிழாவான இன்று பகல் 9 மணிக்கு வசந்தமண்டபபூசையும்உற்சவமும் மாலை 6 மணிமுதல் 7-30 மணிவரை திருப்பூங்குடி வி. க. ஆறுமுகத்தின் 'மாங்கனிபெற்ற மாதரசி' என்னும் பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் நடைபெறும். இரவு 7-30 மணிக்கு வசந்தமண்டப பூசையும் சுவாமி பூவாகனத்தில் வீதிவலம் வருதலும் நிகழும். இரவு 8-15 மணிக்கு திரு.பி. சிவசுப்பிரமணியத்தின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும்.

# கரை சேர்ந்தனர்

பச்சிலைப்பள்ளி, திங்கள் வெற்றிலைக் கேணியிலிருந்து ஆழ் கடலில் மீன் பிடிக்கச் சென்ற 2 கடல் தொழிலாளர்களும் கரை சேர்ந்தனர். கடந்த 4 தினங்களாக இவர்கள் பற்றிய தகவல் எதுவும் கிடைக்காததால் இவரின் குடும்பத்தினரும் உறவினர்களும் பலத்த கவலையில் மூழ்கியிருந்தனர்.

அந்தோனி சூசைப்பிள்ளை, பாவிலு யேசுதாசன் ஆகிய மீன்பிடியாளர்கள் வெளியிணைப்பு இயந்திரங்கள் இணைக்கப்பட்ட கட்டுமரத்தில் ஆழ்கடலுக்குச் சென்ற போது யந்திரக் கோளாறு ஏற்பட்டதன் காரணமாக 4 தினங்களும் கடலிலேயே கிடந்து தத்தளித்ததாயும், கரையிலிருந்து சென்ற தேடுதல் படகு கடசியில் இவர்களைக் கண்டு பிடித்துக் கரை சேர்த்ததாயும் கூறப்பட்டது.

சில நாட்களின் முன்பும் இதே ஊரைச் சேர்ந்த கட்டுமரமொன்று யந்திரக் கோளாறு காரணமாகக் கடலில் கிடந்து இரு தினங்களின் பின் கரை சேர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# வெட்டப்பட்டுவிட்டதாகச்சொன்னேன்”

## மாங்குளம் முக்கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், செவ் ''நான் வாடிக்குப்பேய், செல்லத்துரை, பொன்னையா, பால்ராஜ் ஆகிய மூன்றுபேரும் வெட்டப்பட்டுவிட்டதாக சொன்னேன். அந்த நேரம் அவர்கள் இறந்துவிட்டார்கள் என்று தெரியும் கிராமசேவகர் வாடிக்குச் சென்றுவிட்டுவந்து 3 பேரும் இறந்துவிட்டார்கள் என்று சொன்னார் பின் என்வாக்கு மூலத்தை பதிவுசெய்தார்''

மாங்குளம் முக்கொலை வழக்கில் சாட்சியமளித்த குமாரசாமி சுப்பையா குறுக்கு விசாரணையின் போது மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு நேற்று இரண்டாவது தினமாக வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏ. எல். எஸ். சிறிமானே முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் மாங்குளத்தில் 68-ம் ஆண்டு ஜூலை மாதம் 3-ம் திகதி வில்லியம் பியரத்தன ஆகிய இருவரும், இராமநாதன் செல்லத்துரை, பொன்னையா, பால்ராஜ் ஆகிய மூவரையும் கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சுப்பையா குறுக்குவிசாரணையின்போது மேலும் கூறியதாவது:- செல்லத்துரையை 1 மாதத்தின் முன்னதாக தெரியும் அவருக்கு பழனியும் பால்ராசும் அதிகம் பழக்கம். அவர் மழையை எதிர்பார்த்து மீண்டும் வேலையை ஆரம்பித்தார்.

ழ: செல்லத்துரை, தன் விளக்கமறியலின் என்று கவலைப்படுவதாக உம்முடன் கதைத்தாரா? எனக்கு தெரியாது.

வழ: நீர் வாடியைவிட்டு ஓடியபோது காற்று வீசியதை அறியவில்லை? இல்லை.

வழ: நீர் சத்தம் போடவில்லை? இல்லை.

வழ; வேறு ஒருவரும் சத்தம் போடவில்லை? இல்லை.

வழ: பொன்னையாவின் சத்தம் மட்டும் கேட்டது? ஆம்

வழ; பலத்த குரலிலா? ஆம்

வழ: நான் கதைப்பதிலும் கூடியசத்தமா? ஆம்

வழ: அதற்கு முன் என்ன நடந்ததென்று தெரியாது? ஆம்

வழ: அதற்குள் நித்திரை செய்தீர்? ஆம்

வழ: நிச்சயமாக சொல்ல முடியும்? ஆம்

வழ: உம்மைக் கூப்பிட்டாரா? ஐய்யோஎன்று சத்தம் போட்டார்

முதல் நாள் நன்ருக வேலை செய்தீர்? ஆம்

வழ: அதனுல் நல்ல நித்திரை? ஆம்

வழ: பற்றைமறைவில் எவ்வளவு நேரம் பதுங்கியிருந்தீர்? 2மணி நேரம்

வழ: முழுநேரமும் எதிரிகள் என்ன செய்கிருர்கள் என்று பார்த்துக் கொண்டிருந்தீர்? ஆம்

வழ: எதிரிகள் வாடிக்குள் போனபின் எவ்வளவுநேரம் பார்த்தீர்? அதன்பின் பார்க்கவில்லை

வழ: ஏன்பார்க்கவில்லை? எனக்குமயக்கமாக இருந்தது

வழ: அடுத்தவாடியில் எத்தனைபேர் இருந்தார்கள்? 15 பேர்

வழ: என்னநடந்ததென்று கேட்டார்கள்? ஆம் எல்லாரும் திகைத்தார்கள். பின் செல்லத்துரையின் வாடிக்குப்போனுர்கள் அவர்களில் எட்டு ஒன்பதுபேர் இருக்கும் அவர்களைத் தெரியாது.

வழ: கிராமசேவகரைச் சந்தித்தீரா? ஆம்

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது

# அமைச்சர் குமாரசூரியரை அழைக்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள் அகில இலங்கைத் தமிழ் பேசும் உபதபாலதிபர்கள் சங்கத்தின் யாழ். கிளை நிர்வாகசபைக் கூட்டம் யாழ்ப்பாணம் மலாயன்கபே மேல்மாடியில் நடைபெற்றது.

அகில இலங்கைத் தமிழ் பேசும் உபதபால் அதிபர்களின் சங்கக் காரியதரிசி திரு. ஐ. நடராசா தபால் தந்தி அமைச்சருடன் உபதபால் அதிபர்களின் வாடகைப்பணம், வயதுக்கட்டுப்பாடு, பென்ஷன் திட்டம் முதலியன பற்றி நடைபெற்ற கடிதப்போக்குவரத்துக்களை சபைக்கு வாசித்துக்காட்டினுர்.

யாழ்ப்பாணக் கிளைச்சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தை ஆவணிமாதம்16-ம் திகதி கூட்டத் தீர்மானித்திருப்பதாக சங்கக் காரியதரிசி திரு. க. இராஜசிங்கம் தெரிவித்தார்.

இக்கூட்டத்துக்கு தபால் தந்தி ஔரவ அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியரை அழைக்கவேண்டுமெனவும் அவருக்கு ஒரு விருந்துபசாரமளிக்க வேண்டும் எனவும் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. தபால்தந்தி உதவி அமைச்சர், தபால் தந்தி மா அதிகாரி முதலியோருக்கு அழைப்பு அனுப்பப்படவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

உபதபால் அதிபர்களுக்கு இதுகாலவரை நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாடகைப்பணம் திருப்பிக்கொடுப்பதற்கு முயற்சியெடுத்ததற்கு கௌரவ அமைச்சர் உதவி அமைச்சர் தபால் தந்தி மாஅதிகாரி முதலியோருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# ''உள்ளூராட்சி அதிகார சபையில் தமிழர் இல்லாதது அநீதி

## மானிப்பாய் ப. ச. கூட்டத்தில் தீர்மானம்

தாவடி, திங்கள் 'உள்ளூராட்சி அதிகார சபைக்குத் தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து ஒருவரையாவது அரசாங்கம் தெரிவு செய்யாதது நியாயமற்ற செயல்' என அண்மையில் நடைபெற்ற மானிப்பாய் பட்டின சபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு. சி. இராசேந்திரத்தின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. சி. பொ. வ. க. முதலியார் பேசுகையில், இச்சபையில் உடனடியாக உள்ளூராட்சி அமைச்சர் ஒரு தமிழரையும் சேர்க்க வேண்டும்' எனக் கூறினுர்.

1970-ம் ஆண்டுக்கு வட்டார ரீதியாக ரோட்டு திருத்த வேலைகளும், மின்சார விஸ்தரிப்பும் உடனடியாகச் செய்து முடிப்பது எனவும், செல்லமுத்து விளையாட்டு மைதானத்திற்கு கம்பிவேலி அடைத்து, மானிப்பாய் கோவிற்பற்றிலுளள விளையாட்டுக்கழகங்களால் ஒரு 'நொக் அவுட்' உதைபந்தாட்டப் போட்டியை நடத்தி விளையாட்டரங்கைத் திறந்து வைப்பது எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. திரு சி. கதிர்காமத்தம்பியும் பேசினுர்.

# லெஸ்லி, அனிலை சந்தித்து பேட்டி காண முடிவு

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணத்திற்கு நவீன பஸ் நிலையம் ஒன்று நிறுவுவதற்கு பஸ் நிலையத்தை இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குக் கையளிப்பதற்கு யாழ்ப்பாணம் மேயர் ஆட்சேபம் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து இவ்விஷயமாக போக்குவரத்து அமைச்சருடனும் இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தலைவருடனும் பேச்சுவார்த்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கச்சேரியில் நடந்த மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் தலைவரான யாழ்.மாவட்ட பதில் அரசாங்க அதிபர் திரு.ஜே. எம். சபாரததினம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். யாழ். மாநகரசபை பஸ் நிலையத்திற்கு, இலங்கைப் போக்குவரத்துச்சபையிடமிருந்து கூடிய வாடகையை எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது

யாழ் மாநகரசபை உறுப்பினர் திரு. ஏ. ஜி. ராஜசூரியர், விரைவில் இ போ ச தலைவர் இங்கு வந்து இலங்கைப் போக்குவரத்துச் சபை உத்தியோகத்தர்களுடனும் மேயருடன் இதுசம்பந்தமாக பேச்சவார்த்தை நடத்த விருப்பதாகத் தெரிவித்தார்

இக்கூட்டத்தில் ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம், உடுவில் எம். பி. திரு. வி தர்மலிங்கம், உடுப்பிட்டி எம் பி திரு கே. ஜெயக்கொடி வட்டுக்கோட்டை எம் பி திரு ஏ தியாகராசா நல்லூர் எம் பி திரு சி அருளம்பலம், கிளிநொச்சி எம் பி திரு வி ஆனந்தசங்கரி, நியமன எம் பி திரு எம் சி சுப்பிரமணியமும் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களும் இலாகா உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்

தீவுப்பகுதி படகுச்சேவை பற்றி பண்டிதர் க பொ. இரத்தினம் பேசும் போது கூறியதாவது:-

தற்பொழுதுள்ள வள்ளம் ஓடி பழுதடைந்தபின், சேவை செய்வதற்கு வேறு ஒரு வள்ளம் இல்லை. இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். சேவை ஒழுங்காக நடைபெறவேண்டுமாளுல் 2 மோட்டார் வள்ளங்கள் அவசியம் தேவை, மூன்ருவது வள்ளம் இருக்குமாளுல் ஒரு நாளைக்கு மூன்று தடவை சேவை நடக்கலாம்

கைத்தொழிற்பேட்டை வேலைகளின் முதலாவது கட்டத்தில், நிர்வாகக்கட்டடங்கள் நிறுவப்படுமென்றும், இரண்டாவது கட்டத்தில் 35 கட்டடங்கள் அமைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது

வடடுக்கோட்டை எம் பி திரு ஏ தியாகராசா பேசும்போது போக்குவரத்து வசதிகள் மக்களுக்கு மிக மிக மிக அவசியமென்றும், பிரயாணத்திற்கு ஏற்ற நவீன வசதிகளைச் செய்யவேண்டுமென்றும் கூறினுர், கிராமத்திலுள்ள மக்கள் நகரப்புறங்களுக்குப் பல அலுவல்

(4-ம்பக்கம்பார்க்க)

# 'அம்மா', 'அப்பா' என குழந்தைகள் கதற இளம் பெற்ரேர் உயிரை மாய்த்தனர்!

முல்லைத்தீவு, திங்கள் பெற்றெடுத்த எட்டுக் குழந்தைகள் 'அம்மா' 'அப்பா' என்று அழுது குளறி அனுதரவாகத் தவிக்க, இளம் பெற்ரேர்கள் தம் உயிரை மாய்த்துக்கொண்ட நெஞ்சை உருக்கும் சம்பவம் முல்லைத்தீவைச்சேர்ந்த கற்சிலைமடுக்கிராமத்தில் நடந்துள்ளது.

வாழ்வை கிருமி நாசினிக்குபலியாக்கியஇராமலிங்கம் கார்த்திகேசு என்ற எட்டுக் குழந்தைகளின் தந்தைக்கு வயது 30 தாயார் சின்னுச்சி வயது 25. பிள்ளைகள் எட்டும் பதினெரு வயதுக்குட்பட்டவர்கள்.

குடும்பத் தகராறுதான் இளம் பெற்ரேரின் உயிரைக் குடித்ததற்குக் காரணம் என மரணவிசாரணையில் சாட்சியங்களால் தெரியவந்தது

கிருமிநாசினி அருந்திய இருவரும் முல்லைத் தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சில மணி நேரத்தில் மரணமானுர்கள் ஆஸ்பத்திரியில் அவர்களுடைய குழந்தைகள் 'அம்மா' 'அப்பா' என்று கதறி அழுத காட்சி பரிதாபமாகவிருந்தது.

முல்லைத்தீவு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. செ. தம்பையா மரண விசாரணை நடாத்தினுர். தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# தீவுப்பகுதி வள்ளச்சேவை: அரசு பொறுப்பேற்க வேண்டும்!

## யாழ். மாவட்ட இணைப்புக்குழு தீர்மானம்

நல்லூர், திங்கள் தீவுப்பகுதியின் வள்ளச் சேவையை அரசாங்கம் பொறுப்பேற்று நடாத்த வேண்டுமென்றதீர்மானம் யாழ்.மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டதுபொதுத் தேர்தல்முடிந்தபின் நடந்த முதலாவது மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ் காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த மூன்று எம். பிக்களும் தமிழரசுக் கட்சியைச்சேர்ந்த உடுவில், ஊர்காவற்றுறை, உடுப்பிட்டி ஆகிய மூன்று எம். பிக்களும், நியமன எம் பி திரு. எம் ஸி சுப்பிரமணியமும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்டமேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மோட்டார் சைக்கிள்:
E. L. 1146 - Dalcoma Two-Point - மோட்டார் - சைக்கிள் நல்ல நிலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. சி. இராசையா (குருக்கள்), உடுவில் தெற்கு, மானிப்பாய். 3016

யாழ்ப்பாணம் கச்சேரி - நல்லூர் வீதியில் நான்கு பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு. லான்ட் இன்வெஸ்ட் மென்ஸ், 6, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 3014

காணி:
பாடசாலை, புகையிரத நிலையம், தபாலகம் ஆகியவற்றுக்கு அண்மையில் யாழ்ப்பாணம் சுவாமியார் வீதியில் 2 1/4 பரப்பு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்க. A. இராஜசிங்கம், 32, சுவாமியார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். 3020

C. E. 3395 லொறி V. 8. செவலட் எஞ்சின் நல்ல நிலைமையில் ஓடிக்கொண்டிருக்கிறது. (கம்பிக்கூடாரம்) நேரில் வந்து பார்த்து விலை கேட்கவும். மேலதிக எஞ்சின் ஒன்றும் கியர் பொக்ஸ் ஒன்றும் இருக்கிறது. பார்வை இடும் இடம் P. M. நாகரெட்ணம் செட்டியார், நிர் 15/17, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 567. 3018

காணி:
யாழ்ப்பாணம், புங்கங்குளம், கண்டி ரோட் சந்திக்கும், புகையிரதநிலையத்திற்கும் இடையில் மூன்று பரப்பு வெற்று நிலம் லான்ட் இன்வெஸ்மென்ட், 6, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 3021

### தேவை

யாழ்ப்பாண ஸ்தாபனமொன்றிற்கு மனேஜர் வேலைக்கும், கசியர் வேலைக்கும் G. C. E. ஆங்கிலம், தட்டெழுத்து பாடங்களுடன் பிணைப்பணம் கட்டக்கூடியவர்களும், வெளிச்சேவையாளர் வேலைக்கு ஆங்கில அறிவுடையவர்களும் தேவை. ஆண்களும் பெண்களும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3022, 'ஈழநாடு', மேற்பார்த்து, யாழ்ப்பாணம். 3022

## கேள்விப்பத்திர அறிவித்தல்

யோகபுரம் மேற்கு ப. நோ. கூ. சங்கத்திற்கு ஒரு நெற் களஞ்சியக் கட்டிடம் கட்டுவதற்கு பதிவு செய்யப்பட்ட அரசாங்க ஒப்பந்தகாரரிடமிருந்து விண்ணப்பங்கள் கேரப்படுகின்றன.

கட்டிடத்தின் மாதிரிப் படத்தையும் மற்றும் விபரங்களையும் சங்க காரியாலயத்தில் பார்வையிடலாம். விண்ணப்பங்கள் யாவும் 5-8-70ந் திகதிக்கு முன்னதாக கீழ்க் காணும் முகவரிக்குபதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

பொ. சின்னத்துரை,
காரியதரிசி,
யோகபுரம் மேற்கு
ப நோ. கூ. சங்கம்,
2380 துணுக்காய்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 28—7—70

(காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 மாணவர்மன்றம்.

இரவு6-00வாத்தியஇசை. 7-00 திரைகானம், 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

## தீவுப்பகுதி சு. க. அமைப்பாளர்

ஊரதீவு, திங்கள்

தீவுப்பகுதியின் சுதந்திரக்கட்சி அமைப்பாளராக, சர்வோதய அரசில் முன்னணித் தலைவர் திரு. ப. கதிரவேலுவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நியமித்துள்ளது.

## யாழ். மாநகரசபை கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் வேலைகள் செய்வதற்கு யாழ். மாநகரசபையில் கட்டிட ஒப்பந்தகாரராகப் பதிவுசெய்துள்ளவர்களிடமிருந்து 7-8-70 நண்பகல் 12-00 மணி வரை கேள்விகள் என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. நாயன்மார் குள அணைச்சுவர் 100 அடிக்குக் கனகரத்தினம் வீதிப் பக்கமாகக் கட்டுதல்.

2. திறந்த வெளியரங்கில் மலசலகூடங்கள் அமைத்தல்.

3. பட்டுவெளி வாய்க்காலில் அணைச்சுவர் கட்டுதல்.

4. கான் கட்டுதல் பருத்தித்துறை வீதி ஆரியகுளம் மட்டும்.

5. வண்ணன்குளத்தில் கிணறு வெட்டிக் கட்டுதல்.

கேள்விக்காரர் அனைவடும் கேள்விகள் திறக்கப்படும் 7-8-70 பி. ப. 3-30மணிக்கு எனது அலுவலகத்தில் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

யாழ். மாநகரசபை மராமத்துப் பொறியியலாளரிடம் 31-7-70 நண்பகல் 12 00 மணி வரை ரூபா 25/-. ஒவ்வொரு வேலைக்கும் கேள்வி வைப்புப் பணமாகவும் ரூபா 5/- படிவப் பெறுமதியாகவும் செலுத்திப் பெறப்படும் படிவத்தில் விண்ணப்பித்தல்வேண்டும்.

ஏற்றுக் கொள்ளடபடும் கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்துகொண்டதும் கேள்வி வைப்புப் பணம் மாத்திரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

எல்லாக் கேள்விகளும் அரக்கு முத்திரையிடப்பட்டு இணைப்பிரதிகளுடன் கூடியதாக இருத்தல் வேண்டும், கடித உறையின் இடது பக்க மூலையில் என்ன வேலைக்கென்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்

மேல் விபரங்களை மராமத்துப் பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகரசபை ஆணையாளர்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
24-7-70. 2385

## முதலிடம்

வல்வெட்டித்துறை, திங்கள்

வல்லை சிவகுரு வித்தியாசாலை 6-ம் வகுப்பு மாணவியான சி. சி. ராதா என்பவர் பருத்தித்துறைவட்டார தமிழ் தின விழா பேச்சுப்

யாழ். மாவட்ட மெய்வல்லுநர் போட்டி

# உடுப்பிட்டி அ. மி. கல்லூரி எல்லாவற்றிலும் முதலிடம்

இமையாணன், ஞாயிறு

கொழும்பில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை மெய்வல்லுநர் போட்டியில் கலந்துகொள்ள உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வீரர்களும் செல்கின்றனர்.

யாழ் மாவட்டத்தில்நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி எல்லாவற்றிலும் திறமையாகவும் 19 வயதுக்குக்கீழ்ப்பட்ட பிரிவில் முதலாவதாகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் யாழ் மாவட்டகைப்பந்தாட்டப்போட்டியிலும் இக்கல்லூரி முதலாவதாகத் தெரிவுசெய்யப்பட்டு, கொழும்பில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை கைப்பந்தாட்டப் போட்டியிலும் கலந்துகொள்ளவிருக்கிறது.

வல்வெட்டித்துறை

## உதயசூரியன் விளையாட்டு போட்டி முடிவுகள்

வல்வெட்டித்துறை, திங்:

வல்வை உதய சூரியன் 8-வது ஆண்டு விளையாட்டுப் போட்டியும் ஆண்டுவிழாவும் தொடர்ந்து இருநாட்கள் நடைபெற்றன. முதல் நாள் போட்டியை பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்த கமாண்டரான மேஜர் திரு. என். ஈ. ஆர் மார்ட்டினும் இரண்டாம் நாள் போட்டியை வல்வை பொலிஸ் அதிபர் திரு. டி சிறீவர்த்தனவும் ஆரம்பித்து வைத்தனர்.

போட்டிகள் விபரம் பின்வருமாறு: 25 மைல் சைக்கிள் ஓட்டம்: என். மகேந்திரன், யுனைட்டெட் யாழ்ப்பாணம், ஏ. சுந்தரேசுவரன் மல்லாகம், கே. செல்வராசா சுன்னுகம், கே. சிவபாலன் சுன்னுகம், எம். செல்லையா மானிப்பாய், மூன்று கால் ஓட்டம்: சுகுமாரசாமி-பிரேமநாதன், மாணிக்க வாசகர் செல்வச்சந்திரன், மூன்று சில்லு சைக்கிள் ஓட்டம்! ஏ ராஜ்குமார், ஏ. கீதா, எஸ். சிவகுமார் பாரம் தூக்கி ஓடுதல் எஸ் சர்வானந்தம் (யங்கம்பர் மலை) க. சின்னத்தம்பி தொண்டமானுறு) கழக அஞ்சல். ஓட்டம்: திருக்குறள் சனசமூக நிலையம் பண்டத்தரிப்பு, இளைஞர் கலைக் கழகம் குருநகர். ஒருமைல் ஓட்டம்: வி. பற்குணம் ஏ. கந்தசாமி சாப்பாட்டுப் போட்டி: என்! தர்மதாசன் 2 3/4 இருபாண். பி, சாமித்துரை 2 5[illegible] இருபாண். பாரம் தூக்குதல்: ஜே. யேசுராசா 175 இரு (பருத்தித்துறை) எஸ். துரைராசா 170 இரு (பருத்தித்துறை) கே. கிருஷ்ணகுமார் 165 இரு (வல்வை தலையணைச் சண்டை): சோதிரெட்ணராசா-சிவலிங்கம். கயிறு இழுத்தல்: குருநகர் விளையாட்டுக் கழகம் வல்வை குச்சம் சையினிங்ஸ், முட்டி உடைத்தல்: என். இராமகிருஷ்ணன். ரி. சோதிரெத்தினராசா பால்குடித்தல்: வி. சந்திரன் ரி: பிரேமச்சந்திரராசா, ஏ. ரகுபதி சங்கீத கதிரை: ச. சுகிர்தா, சு, சாவித்திரிதேவி 10 மைல் மரதன் ஓட்டம்: இ. திருநாவுக்கரசு (பண்டத்தரிப்பு) 5 மைல் சைக்கிள் ஓட்டம் பெண் ரி. பத்மதேவி (சுன்னுகம்) ஒருமைல் தடை ஓட்டம்: என் ரி. நாகேஸ்வரன், படகோட்டம் ஆர். இரத்தினசபாபதி அருந்தவராசா (தொண்டமானுறு.)

வெற்றி வீரர்களுக்கு ஆண்டு விழாவுக்கு தலைமை வகித்த கலை, கலாச்சார உதவி மந்திரி கௌரவ சே[illegible]மவீரசந்திர சிறீ ப[illegible]சில்கள் வழங்கினுர்

— —

## அமைச்சரைச் சந்திப்பர்

கொழும்பு, திங்கள்

4 பல்கலைக்கழகங்களை சேர்ந்த சட்ட மருத்துவ கலை விஞ்ஞானத்துறைதுணை வேந்தர்கள் விரைவில் கல்வி அமைச்சரைப் பேட்டிகாண விருப்பின்றனர்.

தங்குமிடவசதிசுய[illegible]ஷ போதனை சம்பந்தமான விஷயங்கள் பற்றி அமைச்சருடன் இவர்கள் பேசுவர்.

— —

## குழு நியமனம்

## இன்றைய

"பிள்ளைகளின் கல்வி ல்

# பெற்றோர்களுக்கு அக்கறை வேண்டும்

அல்லைப்பிட்டி, திங்கள்

வசதிக்குறைவுகள் பல நிறைந்த இந்தப்பகுதியில் நெடுந்தீவு மகாவித்தியாலயம் இவ்வளவு சிறப்பாகவும் பாராட்டத்தக்க முறையிலும் விளையாட்டுப் போட்டியை நடாத்துவது மகிழ்ச்சிக்குரியது. மேற்கண்டவாறு நெடுந்தீவு மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதமர் விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய ஊர்காவற் ஆ[illegible] சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா பொ. இரத்தினம் மேலும் பேசுகையில்:- ஊர்காவற்றுறைத் தொகுதியிலுள்ள் மத்திய மகாவித்தியாலயங்களினதும், மகாவித்தியாலயங்களினதும் அதிபர்களை ஒன்றுகூட்டி இம்மகாவித்தியாலயங்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கும் கல்விப் பொது தராதர பரீட்சையில் நல்ல பெறுபேறுகளை பெறச் செய்வதற்கும் வழிவகைகளை அண்மையில் ஆராய்ந்தோம். பரீட்சையில்மாணவர்கள் அவர்ரவர்கள் குறைவாக காணப்படுவதற்கு அவர்கள் ஒழுங்காக பாடசாலைக்கு வராமலிருத்தலும் ஒரு காரணமென அதிபர்கள் பலர் குறிப்பிட்டனர். எனவே பெற்றோர்கள் தங்கள்பிள்ளைகளை கல்வி நிலையங்களுக்கு ஒழு[illegible]க அனுப்ப வே[illegible]டும். அவர்கள் அதிபர்களையும் ஆசிரியர்களையும் இடையிடையே சந்தித்து தங்கள் பிள்ளைகளின் கல்வித் தரத்தையிட்டு உரையாட வேண்டும். இப்பொழுது பாடசாலைகள் எல்லாம் அரசாங்கப் பாடசாலைகளாகவே இருக்கின்றன இப்பாடசாலைகளெல்லாம் பொது மக்களுக்குச் சொந்தமானவை. ஆகவே உங்கள் ஊரிலுள்ள பாடசாலைகளை உங்கள்பாடசாலையென எண்ணி ஆசிரியர்களுடன் ஒத்துழைக்க பெற்றோர்கள் எல்லோரும் முயல வேண்டும்."

போட்டியில் வெற்றியீட்டிய வீர வீராங்கனைகளுக்கு வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. வே. சங்கரலிங்கம் பரிசில்களை வழங்கினுர். இப்போட்டியில் மஞ்சள் இல்லம் முதலாவதாக வந்து அதற்கான வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது. தீவுப்பகுதி வட்டார கல்வி அதிகாரி திரு ஏ. எஸ். நல்லையாவும் விழாவில் கலந்து கொண்டார்.

—

## இரவில் நடமாட்டம்

முள்ளியவளை, திங்கள்

முல்லைத்தீவு பகுதியில் ஜன நடமாட்டமில்லாத இரவு நேரத்தில் சில பெண்கள் கெட்ட எண்ணத்துடன் நடமாடுவதாக புகார்கள் தெரிவிக்கின்றன. கடந்த சில தினங்களாக இப்படியாக நடந்துவருவதாக கூறப்படுகிறது.

## நாடகமன்ற நிர்வாகிகள்

சங்கானை, திங்கள்

சங்கானை பாலமுருகன் நாடகமன்ற நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் எஸ். ரஞ்சன், செயலாளர் ஏ. கே சண்முகரத்தினம், பொருளாளர் ரி தேவா, போஷகர் எஸ். கே. திருச்சிற்றம்பலம் ஐவர் கொண்ட செயற்குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. — —

## இவர்கள் பரிசுபெறுகின்றனர்

சங்கானை, திங்கள்

வலிகாமம் மேற்குப் பிரிவில் 1969-70-ம் ஆண்டிற்காக விவசாய இலாகாவினுல் நடாத்தப்பட்ட நெற்செய்கைப் போட்டியில் சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த திரு. ஆர். சரவணமுத்து முதலாவது இடத்தைப் பெற்று அதற்கான பரிசாக 750 ரூபாவையும்

## வருடாந்த விருந்து

யாழ்ப்பாணம் செவ்.

சுன்னுகம் ஸ்கந்தவ[illegible]த யாக்கல்லூரியின் உயர்தர வகுப்புமாணவர்களின் வருடாந்த இராப்போசன விருந்து இம்மாதம் 31ம் திகதி கொழும்பு சிங்கர் ஸ்தாபனத்தின் அதிபர் ஜே, எம். இராசரத்தினம் தலைமையில் நடைபெறும். மறுதினமான ஆகஸ்ட் 1ம் திகதியில் வருடாந்த பரிசளிப்பு விழா கல்லூரி ஸ்தாபனத் தினவிழா என்பன கல்லூரி அதிபர் திரு. பீ. ஏகாம்பரம் தலைமையில் திறந்த வெளியில் நடைபெறும். இந்நிகழ்ச்சியில் மன்னுர் மாவட்ட அரசாங்கஅதிபர் கலந்து கொள்கிருர். ஸ்தாபகர் நினைவு தின உரையை வடமாநில கல்வி அதிகாரி எஸ் சங்கரலிங்கம் நிகழ்த்துவார். — —

உஷ்ணம் தாங்காமல்

## நீரில் மூழ்கி 50 பேர் மரணம்

டோக்கியோ, ஜுலை 27

ஜப்பானில் உஷ்ணம் தாங்கமுடியாமல் நீர்நிலைகளை நாடிச்சென்ற 50 பேர் நீரில் மூழ்கி மரணமானுர்கள் 17 பேர் காணுமல் போய்விட்டதாகவும் கூறப்படுகின்றது.

## கட்டாக்காலிகள் தொல்லை

புதுக்குடியிருப்பு, திங்கள்

முல்லைத்தீவு குடியிருப்புப் பாதையில் மாலையானதும் கட்டாக்காலிகளினுல் வாகனப் போக்குவரத்துக்கு இடைஞ்சலாயிருக்கிறது. ஊரவர்கள் கால்நடைகளைக் கட்டாமல் திரியவிடுவதனுல் அவை இரவில் வீதிகளிலேயே படுத்துறங்குகின்றன.


## விற்பனைக்கு

ஓவியர்களுக்கும், பெயின்ரிங் வேலைசெய்பவர்களுக்கும், சேலை பிறின்ரிங் வேலை செய்பவர்களுக்கும் உகந்த ஸ்பிறே பெயின்ரிங் கருவி!

எயர் கொம்பிரஸ்சர் இல்லாமல் மின்சாரத்தில் இயங்குவது, சுலபமாக எங்கும் கொண்டு சென்று வேலைசெய்யக்கூடியது!

Burgess Electric Spray Painting Equipment (British make)

கைவசம் இருப்பில் சொற்பமுண்டு. உங்கள் தேவைக்கு முந்திக்கொள்ளுங்கள்,

Burgess Engraving Machine என்கிறேவிங் மெசின் விற்பனைக்கு உண்டு விபரங்கட்கு:-

K. S. பாலசிங்கம், 90, கொழும்புத்துறை றோட், கொழும்புத்துறை தபால் கந்தோருக்கு முன்பாக, யாழ்ப்பாணம், 2384


## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. 1646 / MISC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞம் தேவை. ஆண்களும் பெண்களும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3022, 'ஈழநாடு', மேற்பார்த்து, யாழ்ப்பாணம். 3022

சர்வோதய அரசில் முன்னணித் தலைவர் திரு. ப. கதிரவேலுவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நியமித்துள்ளது.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ்—ஜெயந்தி நடித்த

இரு கோடுகள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சிவாஜிகணேசன் இரு வேடங்களில் பத்மினி - ராகினி - தங்கவேலு நடித்த

உத்தமபுத்திரன்

(புதிய கொப்பி)

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் யாழ்ப்பாணம் திரைகளில்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்

★ சௌகார்ஜானகி

★ நாகேஷ் ★ குமாரிசச்சு

சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்

★ கே. பி. சுந்தராம்பாள்

★ திருமுருக கிருபானந்தவாரியார்

மற்றும்பலர் நடித்த

'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'

துணைவன்

கதை வசனம் பாலமுருகன்

சங்கீதம் K.V. மகாதேவன்

தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்


வல்வெட்டித்துறை, திங்கள்

வல்வை சிவகுரு வித்தியாசாலை 6-ம் வகுப்பு மாணவியான சி. சி. ராதா என்பவர் பருத்தித்துறைவட்டார தமிழ் தின விழா பேச்சுப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார் இவர் யாழ். மாவட்ட தமிழ் தினவிழா பேச்சுப் போட்டியில்முத லிடத்தை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

— —

அல்லைப்பிட்டி, திங்கள்

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலைப் பெற்றோர்கள் தங்களின் பாடசாலையின் குறைகளை வேலணைக்கு விஜயம் செய்திருந்த வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. வே. சங்கரலிங்கத்திடமும், ஊர்காவற்றுறை எம்.பி.பண்டிதர் கா பொ. இரத்தினத்திடமும்கூறினர். இருவரும் பாடசாலைக்குறைகளை கவனிப்பதாக உறுதி கூறினர்.


REGAL JAFFNA

Daily 4-45, 7 & 9-45 P.M.

Poya, Pre-poya 4 Shows

ROUGH NIGHT IN JERICHO

(Serial)

MANOHARA JAFFNA

Daily 4-45, 7-00 & 9-45 p.m.

Poya-Prepoya 10-30 a.m.

Peter Sellers, Victor Mature in

AFTER THE FOX

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 6-30, 10-00 மணி

ஜெமினி-சரோஜாதேவி நடித்த

ஆடிப்பெருக்கு

வெஸ்லிசினிமா

மானிப்பாய்

தினசரி: 6-30, 10-00

பிரிபோயா, போயா 2-30 மணி

சிவாஜி-சாவித்திரி நடித்த

கர்ணன்

ஈஸ்மன்கலர்- புதியகொப்பி

ஸ்ரீ காலிங்கன்

இணுவில்

தினசரி 6-30, 9-30 மணி, போயா, பிரிபோயா 2-30

சிவாஜி-ஜெயலலிதா நடித்த

கலாட்டா கல்யாணம்


2 5/8 ரூ பாண். பாரம் தூக்குதல்: ஜே. யேசுராசா 175 இரு (பருத்தித்துறை)

# இன்றைய பலன்

ஆடி மாதம் 12-ம் திகதி [28-7-70]

மேஷம்- செய்தொழிலில் தடுமாற்றநிலை தென்படும். வேண்டிய ஒருவரை பகைத்துக்கொள்ளநேரிடும்.

ரிஷிபம்- துன்பத்தின் ரேகைகள் படரும். எதற்கெடுத்தாலும் சீறிவிழுவீர்கள். துதிபாடிக்கொண்டே சிலர் துரோகச்செயலில் ஈடுபடுவார்கள்.

மிதுனம்- மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம். கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு.

கடகம்- இதயத்தில் எரிமலை குமுறும். உள்வீட்டிலேயே உபத்திரவங்கள் அதிகரிக்கும். குழந்தை ஒன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

சிம்மம்- எழுத்தாளர்களுக்கு சிறப்பானதினம். பத்திரிகைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் அதிக பயன் அடைவர். இன்று சுப தினம்.

கன்னி- உள்ளத்தில் உவகை கூத்து, உறவினர்கள் வருகை, வாழ்க்கையில் உற்சாகம் நிரம்பியதாக இருக்கும்.

துலாம்- கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும். போக்குவரத்துவிடயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

விருட்சிகம்- குடும்பவழியால் மனதிற்கு நின்மதி பிறக்கும். நீண்டநாள் பூமிப்பிணக்கு சமரசமாக முடிவடையும்.

தனு- விஷமிகளின் புனைந்துரைகள் உங்களுக்கு வேதனையைத் தரும். பொறுமை விரும்பத்தக்கது.

மகரம்- சுற்றுடலில் நல்ல திருப்பம் ஏற்படும். சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களும் கிடைக்கலாம். உற்சாகமான தினம்.

கும்பம்- நண்பர்களை பகைத்துக்கொள்வீர்கள். வீணான சிந்தனைகளுக்கு இடமளியாது இருக்கவும்.

மீனம்- உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரத்துறையில் விருத்தியுண்டு. உற்சாக தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

தங்குமிடவசதிசுயபாஷை போதனை சம்பந்தமானவிஷயங்கள் பற்றி அமைச்சருடன் இவர்கள் பேசுவர்.

— —

## குழு நியமனம்

கொழும்பு திங்கள்

எண்ணைகொழும்புக் கூட்டுத்தாபனத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் பல இலட்சம் ரூபா பெறுமதியான மோசடி சம்பந்தமான விசாரணைநடத்துவதற்காக 4பேர் கொண்ட விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. ... ...

## இந்திய பஸ்கள் இறக்குமதி

கொழும்பு, திங்கள்

இ.போ.ச.50லட்சம்ரூபா பெறுமதியான புதியபஸ்கள் உதிரிப்பாகங்கள் ஆகியனவற்றை இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்வதற்கு ஒழுங்கு செய்துள்ளது,

டாட்டா பென்சுகளே அதிகமாக இறக்குமதி செய்யப்படுமெனவும்இவைஇறக்குமதி செய்யப்பட்டபின், இலங்கை பஸ்சேவை சீர்திருந்துமென எதிர்பார்க்கப்படுகிறது

— —

## ச. ச. நிலைய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்

உடும்பராய் திருக்குமரன் கிராம முன்னேற்ற சங்க புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: இ. கனகலிங்கம், உபதலைவர்: எஸ். செல்லத்துரை, காரியதரிசி: எம். வி. சபாரத்தினம், உபகாரியதரிசி: செ. நடராசா, தனாதிகாரி: செ. சிவக்கொழுந்து 25 பேர் அடங்கிய சிரமதானக்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

— —

## புதிய ரக நெல்

சங்கானை, திங்கள்

மா இலுப்பலம் சென்று நெல் உற்பத்தியில் விசேட பயிற்சி பெற்றுவந்துள்ள சங்கானை விவசாய விஸ்தரிப்பு நிலைய போதனாசிரியர் திரு வி. சின்னையா வரட்சி கூடிய இடங்களில் கூடிய விளைச்சலைக் கொடுக்கக் கூடிய 62355 (மூன்று மாதம்), ஐ. ஆர். 262 (மூன்றரை மாதம்) பி. ஜீ. 1111 (நான்கு மாதம்) ஆகிய நல்லரக நெல்லுகளை கொண்டுவந்துள்ளார் இந்த நெல்லினங்கள் முதலில் வலிகாமம் மேற்குப் பகுதி விவசாயிகளுக்கு அறிமுகம் செய்துவைக்கப்படும்.

லால் நடாத்தப்பட்ட நெற்செய்கைப் போட்டியில் சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த திரு. ஆர்.சரவணமுத்து முதலாவது இடத்தைப் பெற்று அதற்கான பரிசாக 750 ரூபாவையும் பெற்றுக்கொண்டார் இரண்டாவது இடத்தை வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த திரு. எஸ். பொன்னம்பலம் பெற்று அதற்கான பரிசான 300 ரூபாவையும் பெற்றுள்ளார். இவர்களுக்கு செப்டம்பர் மாதம் விவசாயப் பகுதியினரால் கிளிநொச்சியில் நடாத்தப்படும் வடஒளி விவசாய விழாவில் நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்படும். திரு. சரவணமுத்து முன்பும் ஒரு முறை இப்பகுதியில் நடைபெற்ற போட்டியில் தங்கப் பதக்கத்தைப்பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது

ரோட், கொழும்புத்துறை தபால் கந்தோருக்கு முன்பாக, யாழ்ப்பாணம், 2384

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. 1646 / MISC

### யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி கம். (லிமிட்)

கணக்குத் தீர்தல் கலைத்தல்

**அடைவு வைத்த நகைகள் மீட்டல்**

மேற்படி கம்பனியில் நகை அடைவு வைத்தவர்கள் 1970-ம் ஆண்டு ஆவணிமாதம் 3-ம், 4-ம் திகதிகளில் (August 3rd and 4th) ஸ்ரான்லி வீதியிலுள்ள 147-ம் இலக்க (சின்னத்துரை பில்டிங்ஸ்) கட்டிடத்தின் 1-ம் மாடியிலுள்ள எனது காரியாலயத்தில் காலை 11-00 மணிக்கும் மாலை 4 00 மணிக்குமிடையில் வந்து அதற்குரிய அடைவுத்துண்டுகளைக் காட்டி, கொடுக்கவேண்டிய முதலையும் வட்டியையும் கொடுத்து தாங்கள் வைத்த நகைகளை மீட்டுக்கொள்ளலாம்.

பொ, சண்முகரெத்தினம்
கலைப்பாளர்.

யாழ்ப்பாணம்.
1970, ஜூலை 26-ம் திகதி. 2283





குளிர்மையான, மெந்தோல் பில்டர் முனை சிகரெட்டுக்கள். தற்கால நவீன புகையின்பத்திற்கு பசுமையுடன் உங்களை அழைத்துச்செல்வன

நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்டஹோன்

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யு. எஸ். யோசனை: ஜோர்டானும் ஆதரவு

## சிரியா - ஈராக் நிராகரிப்பு

## "அமைதியையே எகிப்து விரும்புகின்றது"

— நாஸர்

கெய்ரோ, ஜூலை 27 மேற்காஸியாவில் அமைதியை ஏற்படுத்தும் முகமாக அமெரிக்கா தெரிவித்துள்ள யோசனைகளின் காரணமாக அரபு நாடுகளுக்கிடையில் கருத்துப் பிளவு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க யோசனைகளை அரபு நாடுகளில் சில ஏற்றுக் கொண்டுள்ள அதே வேளையில், வேறு சிலநாடுகள் நிராகரித்துள்ளன் இதனால் இஸ்ரேலுக்கெதிராக அரபு நாடுகளின் நடவடிக்கைகளை ஒருமுகப் படுத்துவதற்காக அண்மைக் காலகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பயனில்லாமல் போய்விடக் கூடும் என்றும் அஞ்சப்படுகின்றது.

### ஜோர்டான் ஏற்றது

அமெரிக்க யோசனைகளை ஜோர்டானும் ஏற்றுக் கொண்டு விட்டது ஏற்கனவே ஐக்கிய அரபுக் குடியரசும், சூடானும் அமெரிக்க யோசனைகளை ஏற்றுக் கொண்டுள்ளன. ஆனால் சிரியாவும் ஈராக்கும் அமெரிக்க யோசனைகளை முற்றாக நிராகரித்துள்ளன. இதனால் அரபு உலகில் வேற்றுமைகள் மேலும் வளரக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது

ஐக்கிய அரபுக் குடியரசிலுள்ள ஒரே அரசியல் நிறுவனமான அரபு சோஷலிஸக் கட்சி அமெரிக்க யோசனைகளை ஆதரிப்பதற்கு அதிபர் நாஸர் செய்துள்ள முடிவை ஆதரித்துள்ளது. இந்தக் கட்சியின் கூட்டத்தில் பேசிய அதிபர் நாஸர் அமைதியை அடையும் வாய்ப்பு மிச் சிறிதாகவிருந்தபோதிலும் அமைதியையே எகிப்து விரும்புகின்றது, என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜோர்டான் அரசு எடுத்துள்ள முடிவு குறித்து மன்னர் ஹுசேன் எகிப்திய அதிபர் நாஸருக்கு அவசரத் தந்தியொன்றை அனுப்பியிருக்கின்றார்,

ஜோர்டான் அமெரிக்க அமைதி யோசனைகளை ஆதரிக்கின்றது என்றாலும் பாலஸ்தீனக் கொமாண்டோ நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது எமது பொறுப்பல்லவென்று அறிவித்துள்ளனர். ஜோர்டானிலுள்ள பாலஸ்தீன விடுதலை இயக்கங்கள் அமெரிக்க யோசனைகளை முற்றாக நிராகரித்துள்ளன.

ஐக்கிய அரபுக் குடியரசு அதிகாரிகள் ஏற்கனவே கெய்ரோவிலுள்ள அமெரிக்க தூதருடன் ஆலோசனைகள் நடத்தத் தொடங்கியிருப்பதாக செய்திகள் கிடைத்துள்ளன.

### இஸ்ரேல் மந்திரிசபை ஆலோசனை

அமெரிக்க யோசனைகளை இஸ்ரேல் ஏற்குமா நிராகரிக்குமா என்பது இன்னும் தெரியவில்லை நேற்று இஸ்ரேல் மந்திரிசபை அமெரிக்க யோசனைகள் பற்றி ஆலோசனைகள் நடத்தியது ஆனால் முடிவெதுவும் எடுக்கவில்லை. நாளைய தினம் மீண்டும் இஸ்ரேல் மந்திரிசபை கூடி இதுபற்றி ஆலோசிக்கவிருக்கின்றது. அனேகமாக சில நிபந்தனைகளுடன் அமெரிக்க யோசனைகளை இஸ்ரேலியர் ஏற்றுக்கொள்ளக் கூடுமென்று கருதப்படுகின்றது

## கேரளத்தின் முன்னாள் முதல்வர்

## பட்டம்தாணுப்பிள்ளை காலமானர்

## லண்டன் துறைமுக நெருக்கடி

லண்டன், ஜூலை 28 இங்கிலாந்தில் துறைமுகத் தொழிலாளர்கள் நடத்திவரும் வேலைநிறுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவது சம்பந்தமாக துறைமுக அதிகாரிகளும், தொழிலாளர் பிரதிநிதிகளும் துறைமுகத்தொழில் சம்பந்தமான மந்திரியை நேற்றுச் சந்தித்தார்கள்.

## யப்பானில் மீண்டும் பூமியதிர்ச்சி

### ஒன்பதுபேர் காயம்

டோக்கியோ, ஜூலை 27 ஜப்பானில் மீண்டும் ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் ஒன்பதுபேர் காயமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பூமியதிர்ச்சியை தொடர்ந்து பெரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

மின்சாரம் சிலமணிநேரம் தடைப்பட்டதுடன், புகையிரதசேவைகளும் பல மணித்தியாலங்கள் நிறுத்தப்பட்டன.

## மே. ஜேர்மன்-சோவியத் பேச்சுவார்த்தை

மொஸ்கோ, ஜூலை27 வன்முறை ஒழிப்புசம்பந்தமாக ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்வதற்காக மேற்கு ஜெர்மன் வெளிநாட்டமைச்சரும், சோவியத் வெளிநாட்டமைச்சரும் இன்று மாஸ்கோவில் சந்தித்துப்பேசுகிறார்கள்.

## படமாளிகையில் குண்டுவெடித்தது

## நடேஸ்வரா கல்லூரியில் 'கைத்தொழில் நிறுவனம்!

மாவிட்டபுரம், திங்கள் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் தொழில் நுட்பத்துறை மாணவர்களின் வசதியை முன்னிட்டு 'கைத்தொழில் நிறுவனம்' ஒன்று அமைக்கப்பட விருக்கிறது.

மேற்படி கல்லூரி மாணவர்கள் இதுகாலம் வரை தொழில் நுட்பத்துறையில் பயிற்சி செய்ய முடியாது கஷ்டப்பட்டனர். இதற்கு இடையில் அரசாங்கம் இந் நிறுவனம் அமைப்பதற்காக 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை வழங்கியுள்ளது.

இப் பொருட்களைக் கொண்டு நிறுவனம் அமைக்க கட்டிடம் கட்ட அடுத்த மாத முதற் பகுதியில் ஒரு கலை விழாவை நடாத்தி நிதி சேர்க்கக் கல்லூரி அதிபர் திரு கே. சிவப்பிரகாசம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

## 'வன்னியின் சரித்திரச்சான்று பண்டாரவன்னியன் நாடகநூல்'

### முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் உரை

முல்லைத்தீவு, திங்கள் 'வன்னி நாட்டின் சின்னமாக விளங்கியவன் பண்டாரவன்னியன். அந்நிய ஏகாதிபத்தியத்துக்கு அடிபணியாது எதிர்த்துப் போராடிய பண்டாரவன்னியனை வலைவீசிப்பிடித்தவர் அந்நிய ஏகாதிபத்திய வாதிகள். இப்படிப்பட்ட மாவீரனின் சரித்திரமறியாத ஒரு சிலர் அவன் தமிழன் அல்ல என்று வியாக்கியானம் செய்வது விந்தையாக இருக்கின்றது

இவ்வாறு பண்டாரவன்னியன் நாடக நூல்வெளியீட்டு விழாவில் நூலைவெளியிட்டு வைத்துப்பேசிய முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கா. சிவசிதம்பரம் கூறினார். முள்ளியவளைவித்தியானந்தக் கல்லூரி திறந்தவெளியரங்கில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவுக்கு கலாநிதி பொ. பூலோகசிங்கம் தலைமை வகித்தார்,

திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியவை: வன்னி நாட்டின் சரித்திரத்தை இந்நூல் எடுத்துக்காட்டும்.

நூலாசிரியர் முல்லைமணி திரு. வே. சுப்பிரமணியத்தின் ஆக்கமும் ஊக்கமுமே சென்ற இரு ஆண்டுகளும் பண்டாரவன்னியனுக்கு விழா எடுக்க உதவியது வரலாற்றை அறிந்து உண்மைகளை ஆராய்ந்து வெளியிடுவதே நூலாசிரியர்களின் முக்கிய கடமையாகும் இதை இந் நூலாசிரியர் திறம் படச் செய்துள்ளார்.

திரு. நா. சுப்பிரமணிய ஐயர் வரவேற்புரையும், முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரி அதிபர் திரு. அ. கா. மகாலிங்கம் முல்லைத்தீவு ம. வி. அதிபர் திரு. க. தர்மலிங்கம், ஆகியோர் சிறப்புரையும், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி ஆசிரியர்களான திரு அ. மகாலிங்கம், திரு. த. செல்லத்துரை ஆகியோர் ஆய்வுரையும், திரு. ப. சவரிமுத்து பா. ஆறுமுகம் திரு. சி. உ. நடனசபாபதி ஆகியோர் பாராட்டுரையும் வழங்கினர் பண்டார வன்னியன் கழகப்போஷகரும் வவனியா முன்னாள் எம்.பி. யுமான திரு. கா சிவசிதம்பரம் நூலாசிரியர் முல்லைமணிக்குத்தங்கப் பதக்கம் வழங்கிப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

முள்ளியவளை வளர்மதி மன்றத்தினரால் பண்டார வன்னியன் நாடகம் நடித்துக்காண்பிக்கப்பட்டது.

## உணவுப் பொருட்களை

## தனியார் துறையினருக்கு இனி கூ. மொ. வி. விநியோகிக்காது

யாழ்ப்பாணம், செவ் ... ந்த கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் புதிய ... என்றும் பதியப்பட்ட வியாபாரக் கொள்கைப்படி கூட்டுறவு பாரிகளின் தேவைக்கேற்ப மொத்த நிறுவனம் தனி சமாசங்கள் கூட்டுறவு

## அல்லைப்பிட்டிச் செய்திகள்

### தொண்டர்படை

அல்லைப்பிட்டி, திங்கள் கள்ளக்கடத்தல் அபாயத்திலிருந்து தீவுப்பகுதி மக்களைக் காப்பாற்றும் முயற்சியாக தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. எஸ். விநாயகலிங்கத்தின் வேண்டுதலின் பேரில் அல்லைப்பிட்டிக்கிராம சேவையாளர் பகுதிக்குள் ஐம்பது தொண்டர்களை அல்லைப்பிட்டி கிராமசேவையாளர். திரு. கே. கந்தசாமி திரட்டிவருகின்றார். இரகசியமுறையிலும் ரோந்து நடவடிக்கைகளின் மூலமும் இவர்கள் செயல்படுவர், தற்போது தீவுப்பகுதியிலுள்ள ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் ஐப்பது தொண்டர்கள் வீதம் திரட்டப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### விளையாட்டுப் போட்டி

வேலணை சரஸ்வதி வித்தியாசாலையின் இல்லவிளையாட்டுப் போட்டிகள் அடுத்தமாதம் முற்பகுதியில் வேலணை திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது இவ் வருடம் தான் இப் பாடசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டிகள் முதன் முறையாக நடைபெறுகின்றன.

### திருநாள்

ஊர்காவற்றுறை புனித சந்தியோகுமையோர் தேவாலயத்தில் திருச்சபையின் முதல் வேதசாட்சியாகிய புனித சந்தியோகுமையோரின் திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

### புதிய அதிபர்

வேலணை மகாவித்தியாலயத்தின் புதிய அதிபராக அங்கு ஆசிரியராகக்கடமையாற்றிய திரு கே. பாலசிங்கம் இம்மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

## 'நமதுபடங்களை ஆதரிக்க வேண்டும்'

உடுப்பட்டி, திங்கள் 'ஈழத்தில்தயாரிக்கப்படும் திரைப்படங்கள் தமிழகப் படங்களை விடத் தரத்தில் குறைந்தனவல்ல! இங்கு தயாராகும் திரைப்படங்களை நாம் ஆதரிப்பதின் மூலமே ஈழத்தில் தமிழ்த் திரைப்படங்கள் அதிக முன்னேற்றமடைவதோடு, திரைப்படத் தொழிலும் வளர முடியும்'.

இவ்வாறு அல்வாய் சிலம்

# 16 தமிழ் பௌத்த ஆசிரியர் நிலையென்ன?

### நியமன எம். பி. யிடம் முறையீடு

உடுப்பிட்டி, திங்கள் கரவெட்டி புத்தூர், அச்சுவேலி, அல்வாய் ஆகிய இடங்களிலுள்ள தமிழ் பௌத்த பாடசாலைகளில் கடந்த 5 வருடகாலமாகச் சம்பளம் பெருது கடமையாற்றி வந்த ஆசிரியர்களைப் பொறுப்பேற்கும் விஷயத்தில் 16 ஆசிரியர்களை அரசாங்கம் கைவிட்டுள்ளதாக தெரிகிறது.

கரவெட்டி ஸ்ரீநாரததமிழ் பௌத்த பாடசாலையிலிருந்து 15 ஆசிரியர்களில் 10 பேரும், புத்தூர் பௌத்த பாடசாலையிலிருந்து15ஆசிரியர்களில் 11பேரும், அச்சுவேலி ஸ்ரீவிபாஸி வித்தியாலயத்திலிருந்து 9 ஆசிரியர்களில் 7பேரும், அல்வாய் ஆனந்த ஹெமகேவித்தியாலயத்திலிருந்து 13 ஆசிரியர்களில் 8பேரும் அரசினர் ஆசிரியர் நியமனம் பெற்றுள்ளனர். மற்றவர்கள் பற்றி அரசாங்கம் எதுவும் குறிப்பிடவில்லையெனத் தெரிகிறது.

இவ்வாசிரியர்கள் சென்ற 5வருடகாலமாக இத்தமிழ் பௌத்த பாடசாலைகளில் இலவசமாகப் பணிபுரிந்து வந்ததுடன் மாணவர்களுக்கான பணிஸ் முதலிய செலவுகளையும் தாமே பொறுப்பேற்றுநடத்தி வந்தனராம். இவர்கள் ஒவ்வொருவரும் வருடத்திற்கு 1000 ரூபா வீதம் சுமார் 5000 ரூபா வரை கடந்த 5 வருடங்களில் இப்பௌத்தபாடசாலைகளின் வளர்ச்சிக்காகச் செலவிட்டுள்ளனராம்.

வடபகுதியில் தமிழ் பௌத்தபாடசாலைகளை உருவாக்கி வெற்றிகரமாக இயக்குவதில் முழுமூச்சுடன் பாடுபட்டுழைத்துவந்த இவ்வாசிரியர்களில் ஒருபகுதியினர் அரசாங்கத்தால் அங்கீகாரம் அளிக்கப்படாததால் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இவ்வாசிரியர்கள் தாம் இந்து மதத்தை விட்டு விலகிப் பௌத்தமதத்தைத் தழுவியுள்ளதாகவும், வாரந்தோறும் விஹாரைக்குச் சென்று வழிபட்டு வருவதாகவும் பௌத்தமதத்தைத் தழுவியதின்மூலம்தங்கள் வாழ்க்கையில் சுபிட்சம் பெறமுடியும் என்று எதிர்பார்த்ததாகவும் இறுதியில் தமக்குக் கிடைத்தது ஏமாற்றமே என்றும் நமது நிருபரிடம் கவலை தெரிவித்தனர்.

இந் நான்கு தமிழ்ப் பௌத்த பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னரும் இவ்வாசிரியர்கள் தொடர்ந்து 15 மாதங்களாகச் சம்பளம் பெருது பணிபுரிந்து வந்தனராம்.

இது சம்பந்தமாக நியமனம் கிடைக்காத 16 ஆசிரியர்களும் தமது அநாதரவான நிலையை விளக்கித் தமக்கும் அரசாங்க நியமனம் பெற்றுத்தருமாறு நியமன எம். பீ. திரு. எம். ஸி. சுப்பிரமணியத்தைக் கோரியுள்ளனர்.

## 'வர்க்க நலன்களைப் பாதுகாக்க போலிப் பிரிவினையை உருவாக்குகின்றனர்'

### காராளசிங்கம் கூறுகிறார்

யாழ்ப்பாணம், செவ் "தமிழ் மக்களின் இனப் பிரச்னைப் போராட்டமும் அகில இலங்கையிலும் நடக்கும் சோஷலிஸத்துக்கான போராட்டமும் பிரிக்கமுடியாதது. தமிழரசு தமிழ்காங்கிரஸ் தலைமை தங்களுடைய வர்க்கநலன்களை பாதுகாப்பதற்காக போலிப் பிரிவினையை உருவாக்குகின்றன"

வடபகுதி சோஷலிஸ்ட் கல்வி வட்ட அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சமசமா

வதற்கு காலம் தாழ்ந்துவிட்டது. ஆனாலும் சந்தர்ப்பம் இல்லாமல் இல்லை. ஆகவே நாம் தீவிரமாக செயல்பட்டு சகல முற்போக்கு சக்திகளுடன் இணைவோம்.

கல்விவட்டம், தெற்கு வியட்நாம் தற்காலிக புரட்சி அரசின் வெளிவிவகார மந்திரி கியூயென் திபின் அம்மையாரின் இலங்கைவருகையை குதூகலிப்பாக வரவேற்பதுடன், அமெரிக்க ஏகாதிபத்திய கொலைவெறியர்களுக்கு எதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம்தாணுப்பிள்ளை காலமானர்

திருவானந்தபுரம், ஜூலை 27

கேரளத்தின் முன்னுள் முதலமைச்சர் பட்டம்தாணுப்பிள்ளை நேற்று காலமானர்.

திருதாணுப்பிள்ளையின் மரணத்தையொட்டி இன்று கேரளத்தில் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்க அலுவலகங்கள் யாவும் மூடப்பட்டுள்ளன. கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளன. திரு. பட்டம் தாணுப்பிள்ளையின் உடல் தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படுவதற்கு முன்பதாக விக்டோரியா பிலிமண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவிருக்கின்றது.

திரு பட்டம்தாணுப்பிள்ளையின் மறைவு குறித்து இந்தியத் தலைவர்கள் பலரும் கவலை தெரிவித்திருக்கிருர்கள்.

### ராஜாஜி கவலை

பட்டம்தாணுப்பிள்ளையின் மறைவு பற்றி முதுபெரும் அரசியல் ஞானியான திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் கவலை தெரிவித்திருக்கிருர். அவர் விடுத்த ஒரு அனுதாபச் செய்தியில் திரு. பட்டம்தாணுப்பிள்ளை, நல்ல மனிதர், நல்ல நண்பர், மிக நல்ல் மந்திரி என்று தெரிவித்துள்ளார்.

### கிரி அனுதாபம்

ஜனுதிபதி கிரி விடுத்துள்ள ஓர் அஞ்சலி செய்தியில் நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் போது திரு. தாணுப்பிள்ளை, பெரும் தியாகங்களைச் செய்தவர் என்றும், தேசத்தின் மிகப் பெரிய தலைவராக அவா விசாலித்துவாழ்ந்தவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

### இந்திராகாந்தி

திரு. தாணுப்பிள்ளையின் மறைவு குறித்து திருமதி இந்திரா காந்தி விடுத்த அனுதாபச் செய்தியொன்றில், அவர் பெரிய வீரராகத் திகழ்ந்தார் என்றும் எதையுமே வெளிப்படையாகச் சொல்லும் துணிவு கொண்டவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

---

இன்று மாஸ்கோவில் சந்தித்துப்பேசுகிறார்கள்.

## படமாளிகையில் குண்டுவெடித்தது

சைகோன், ஜூலை 27

சைகோனில் படமாளிகையொன்றில் குண்டு வெடித்ததால் ஏழு பேர் கொல்லப்பட்டதாகவும், முப்பது பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## டிராக்டருக்கு ஒருவர் பலி

விஸ்வமடு, திங்கள்

டிராக்டர் சில்லுக்குள் நெரியுண்டு ஒருவர் துடிதுடித்து மரணமான சம்பவம் ஒன்று தர்மபுரத்தில் நடந்துள்ளது. மாத்தளையிலிருந்து தர்மபுரத்திற்கு தனது பிழைப்பைத் தேடி வந்தவருக்கே இந்த பரிதாப சம்பவம் நிகழ்ந்தது.

கடந்த வியாழனன்று தர்மபுரம் பிரதான வீதியில் உள்ள கடையொன்றில் சிலருடன் பேசிக்கொண்டு நிற்கையில் திடீரென டிராக்டர் அவரைமோதியதாம். சாரதியின் ஆசனத்திற்கு அருகில் இருந்தவரின் கெட்டித்தனத்தால் பலர் இவ் விபத்தில் தப்பிக் கொண்டனர். நேராக வீதியில் வந்து கொண்டிருந்த பிரஸ்தாப டிராக்டர் திடீரெனக் கடைப்பக்கம் திரும்பியதாகவும், சாரதிக்கு அருகிலிருந்தவர் கடைக்குள் டிராக்டர் நுழையாது தடுத்தபோதே இதில் மாத்தளையைச் சேர்ந்த நபர் பலியானதாகவும் மாண விசாரணையில் தெரியவந்தது.

சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்பட்ட டிராக்டர் சாரதி 1000 ரூபா பிணையில் விடப்பட்டார்.

## பாடசாலையில் திருட்டு

உடுப்பிட்டி, திங்கள்

அல்வாய் தெற்கு சின்னத்தம்பி வித்தியாலயத்தில் கூரை பிரித்துத் துணிகரத் திருட்டு நடைபெற்று உள்ளது. பாடசாலை அறையினுள் வைக்கப்பட்டிருந்த பெறுமதி வாய்ந்த மணிக்கூடு, கிடாரங்கள், தையல் துணிகள் முதலியன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இத் திருட்டுச் சம்பந்தமாகப் பருத்தித்துறைப் பொலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

---

## “சுகாதாரசேவையிலுள்ள சகலசிறுசேவையாளருக்கும் 8 மணி நேரவேலை தருக”

யாழ்ப்பாணம், திங்கள்

“கிராம வைத்தியசாலை, மருத்துவமனைகள் ஆகியவற்றில் மருத்துவமாதர் பணியாளர் 24 மணி நேரமும் வேலைசெய்தும் மேலதிக ஊதியமும் ஒய்வும் மறுக்கப்படுகின்றது, இரட்டிப்பு மேலதிக சம்பளம் வழங்கியோ, அன்றேல் மேலதிக ஊழியர்களை நியமித்தோ வசதி செய்துதரவேண்டும். இவ்வாறுகோரும் தீர்மானத்தை தேசிய அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

யாழ். மாநகரசபை மண்டபத்தில் திரு. பொ. தேவராசா தலைமையில் நடைபெற்ற சங்கத்தின் 5-வது வருடாந்தக் கூட்டத்தில் மேலும் நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு:-

சுகாதார சேவையிலுள்ள சகல சிறுசேவையாளர்களுக்கும் நாள் ஒன்றுக்கு 8 மணிநேர வேலைகொடுபட வேண்டும்.

மருத்துவ மாதர் உட்பட சகல சிறுசேவையாளர்களுக்கும் சம்பளம் கொடுபடும்போது சம்பள விபரம் அடங்கிய பத்திரமும் கொடுபடவேண்டும்.

மருந்து கலவையாளர்களுக்கு அரசகரும மொழியின் காரணமாகத் தடுத்து நிறுத்தப்பட வருடாந்த உயர்ச்சிப்பணத்தைகொடுப்பதோடு அரசகரும மொழி காரணமாக வேலையிலிருந்து நீக்கப்பட்ட மருந்து கலவையாளர்களை மீண்டும் வேலை கொடுப்பதுடன் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அரசமொழியின் தரம்குறைக்கப்படவேண்டும்.

## டிசம்பரில் மகாநாடு

நாவலப்பிட்டி, திங்கள்

எதிர்வரும் டிசம்பரில் லங்கா தோட்டத்தொழிலாளர் யூனியன் வருடாந்த மகாநாடு நாவலப்பிட்டியில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

---

## தனியார் துறையினருக்கு இ

## கூ. மொ. வி. விநியோகிக்காது

யாழ்ப்பாணம், செவ்.

அரசாங்கத்தின் புதிய கொள்கைப்படி கூட்டுறவு மொத்த நிறுவனம் தனியார்துறை வியாபாரிகளுக்கு உணவுப் பொருட்கள் விற்பனை செய்வதை முற்ருக நிறுத்திக் கொண்டுவிட்டதெனத் தெரியவருகிறது. தனியார்துறையினர் தமக்குத் தேவையான பொருட்களை இனிமேல் அண்மையிலுள்ள ப. நோ. கூ. ச. சமாசங்களில் மட்டுமே பெற்றுக் கொள்ளவேண்டும்.

சமாசங்கள் தத்தம் எல்லைக்குள் இருக்கும் தனிப்பட்ட வியாபாரிகளைப் பதிந்து கொள்ள வேண்டும். என்றும் பதியப்பட்ட வியாபாரிகளின் தேவைக்கேற்ப சமாசங்கள் கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனத்திடமிருந்து பொருட்களைப் பெற்று இருப்பில் வைத்திருக்க வேண்டும் என்றும் தெரியவருகிறது.

புதிய திட்டப்படி தற்போது மாவு, சீனி போன்ற உணவுப்பொருட்கள் சமாசமூலம் வியாபாரிகளுக்குக் கிடைப்பதுபோல் ஏனைய உணவுப் பொருட்களும் இனிமேல்ப நோ கூ. ச. சமாசங்கள் மூலமே கிடைக்கும்.

(அராலி. நிரு)

---

# தமிழ் நாடகங்கள் தரத்தில்குறையவில்லை

## வல்வெட்டித்துறையில் கலாசார உதவி அமைச்சர்

வல்வெட்டித்துறை, திங்கள்

“தமிழ் நாடகங்கள், சிங்கள நாடகங்களுக்கு எந்த விதத்திலும் குறைந்ததில்லை.”

மேற்கண்டவாறு கலை கலாச்சார உதவி மந்திரி திரு. சோமவீர சந்திரசிறி வல்வெட்டித்துறையில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாட்களாக நடைபெற்ற வல்வெட்டித்துறை உதயசூரியன் கழகத்தாரின் 8வது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராக உதவி மந்திரி கலந்துகொண்டார்.

அவர் இவ்விழாவில் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:

“தமிழ் நாடகங்களைப் போன்றே அநேக சிங்கள நாடகங்கள் மேடையேற்றப்படுகின்றன. ஆனுலும் தமிழ் நாடகங்கள், சிங்கள நாடகங்களுக்கு எந்தவிதத்திலும் குறைந்ததில்லை. நான் கடந்த பத்து நாட்களாக வடபகுதியில் சுற்றுப் பிரயாணம் செய்துவருகின்றேன். அப்போது தமிழ்க் கலாச்சார அம்சங்கள் நிறைந்த பரதநாட்டியம் போன்ற பல கலைநிகழ்ச்சிகளைக் கண்ணுற்றேன். இலங்கையர், மொழி ரீதியாக வேறுபட்டாலும் கலாச்சார ரீதியில் பிணைக்கப்பட்டுள்ளார்கள்.

சிங்களவரும் தமிழரும் மனிதாபிமானத்தோடு நடக்கவேண்டும். இதற்காகவே பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கலாச்சார ரீதியிலான உறவையும் விரும்பியுள்ளார். மக்கள் அரசாங்கம் கலாச்சாரத்தை அபிவிருத்திசெய்யும். அதற்கு நாம் பேதமின்றி இயங்கவேண்டும். இங்குள்ளோரின் நல்லெண்ணங்களை நான் கொழும்பு திரும்பியதும் அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறுவேன்.

இவ்வளவு பிரமாண்டமான விழாவை நடாத்தியமைக்கு உதயசூரியன் கழகத்தாரைப் பாராட்டுவதோடு, என்னை அழைத்தமைக்கும் நன்றிதெரிவித்துக்கொள்கிறேன்.”

## உதவி அமைச்சர் சந்தித்தார்!

வல்வெட்டித்துறை, திங்கள்

உதவி கலாச்சார அமைச்சர் திரு. சோமவீரசந்திரசிறி பருத்தித்துறை தும்பளை ரேட்டிலுள்ள யுனைட்டெட் விளையாட்டுக் கழக நிர்வாகிகளைச் சந்தித்துப் பேசினர்.

நீண்டகாலமாக அவ்விடத்திலிருக்கும் காணியொன்று வீடமைப்புத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்தும் பயன்படுத்தப்படாது இருப்பதால் பருத்தித்துறைக்கு பொது விளையாட்டரங்காக்கித் தரும்படி நிர்வாகிகள் உதவி அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்கள்.

இவ்விஷயத்தை தமது கவனத்தில் கொண்டிருப்பதாகவும், மகஜர் ஒன்று அனுப்பும்படியும் தெரிவித்தார்.

---

களை நாம் ஆதரிப்பதின் மூலமே ஈழத்தில் தமிழ்த் திரைப்படங்கள் அதிக முன்னேற்றமடைவதோடு, திரைப்படத் தொழிலும் வளர முடியும்”.

இவ்வாறு அல்வாய் சிலம்பொலி நாடகக் கலா மன்றத்தினரின் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் நாடக அமைப்பாளரும், ஈழத்துத் திரைப்பட நடிகருமான திரு பெரி. சூரியமூர்த்தி குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் இம்மாத இறுதியில் வெளியிடப்படவிருக்கும் வெண்சங்கு என்ற ஈழத்துத் திரைப்படத்தை ஈழத் தமிழர்கள் அத்தனைபேரும் ஆதரித்து ஈழத்துக் கலைஞர்களுக்கு ஊக்கம் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இக் கூட்டம் திரு சி. தங்கத்துரை தலைமையில் நடைபெற்றது. செயலாளர் திரு. இ. ஜெயநிதி நன்றியுரை கூறினர்.

## புனித அன்னம்மாள் திருநாள்

முசலி, திங்கள்

வங்காலை புனித அன்னம்மாள் திருநாள் வங்காலையில் இடம்பெற்றது. திருநாளுக்கு முன்பாக தேவநற்கருணைச்சுற்றுப்பிரகாரம் இடம் பெற்றது.

திருநாளன்று காலை புனித அன்னம்மாள் திருச்சுரூபச் சுற்றுப்பிரகாரம் இடம்பெற்றது. அன்று வங்காலை புனித அன்னம்மாள் கட்டளைக்குரவர் வண. பிதா பெனட் கொன்ஸ்ரன்ரைன் என்பவரால் திவ்விய பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## எழுதுவினைஞர்சங்க வருடாந்தக் கூட்டம்

கோட்டை, திங்கள்

வருகிற செப்டம்பர் மாதம் 7-ம் திகதி அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் 9-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்துக்கான பிரேரணைகளும் பதவிகளுக்கான நியமனப்பத்திரங்களும் ஆகஸ்ட் 15-ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுமென சங்கப் பொதுச் செயலாளர் திரு. இ. இராமநாதன் தெரிவித்துள்ளார்.

---

வர்க்கநலங்களை பாதுகாப்பதற்காக போலிப் பிரிவினையை உருவாக்குகின்றன”

வடபகுதி சோஷலிஸ்ட் கல்வி வட்ட அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சமசமாஜக்கட்சிப் பிரமுகர் திரு. வி. காராளசிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

“சோஷலிஸம் என்பது ஒரு விஞ்ஞானம். இது நாம் பிரச்னையை சரியாக அணுகுவதற்கு ஒரு சரியான உலக நோக்கைதருகின்றது. சில விஞ்ஞான பாடங்களைபோல சோஷலிஸமும், தத்துவத்தையும் செயல்முறையையும் இணைக்கவேண்டும் அப்படிச் செய்வதற்கு நாம் பழகிக்கொள்ளவேண்டும். ஓர் உபகரணத்தை அல்லது ஆயுதத்தை பாவிக்கப்பழகியவர் ஒருவரால்தான் அதைச்சரியாகக் கையாளமுடியும். ஆகவே ஒரு சமுதாயமாற்றத்திற்காக நாம் செயலாற்ற இன்றே செயல்பட ஆரம்பிப்போம்.

அகில இலங்கை முற்போக்கு சக்திகளுடன் தமிழ் மக்கள் இணைந்து செயல்படு

புரட்சி அரசின் வெளிவிவகார மந்திரி கியூயென் தி பின் அம்மையாரின் இலங்கைவருகையை குதூகலிப்பாக வரவேற்பதுடன், அமெரிக்க ஏகாதிபத்திய கொலைவெறியர்களுக்கு எதிராக போராடும் வீரவியட்நாம் மக்களுடன் தனதுஒருமைப்பாட்டைத் தெரிவித்துக்கொள்கிறது என்ற தீர்மானம் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. சி. சுப்பிரமணியம், உபதலைவர்கள்: திரு. டாக்டர் எஸ். ரகுநாதன், திரு. எஸ். திருநாவுக்கரசு, காரியதரிசி: திரு. எம். பேராயிரவர், உப காரியதரிசி: திரு. எம். சிவபாலராஜா, தனாதிகாரி: திரு எஸ். சிற்றம்பலம், நூல் நிலைய பொறுப்பு: திரு. க. கதிர்காமநாதன், பத்திராதிபர்: திரு: வி. கோபால கிருஷ்ணன். நிர்வாக சபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள் க. குணேந்திரதாசன், க. திருநாவுகரசு, எஸ், ராஜன், எட்வின் பதமநாதன், எஸ். அல்பிரட், சி. செல்லத்துரை.

---

## “மனத்தூய்மையுள்ளவர்களே ஆத்மீக வாதிகளாக முடியும்”

உடுப்பிட்டி, திங்கள்

“ஆத்மீகத்துறையில் ஈடுபடுவது என்பது எளிதானது அல்ல மனத்தூய்மையும், வினைத்திட்பமும் உள்ளவர்களே ஆத்மீகவாதிகளாகத் திகழமுடியும். அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் அறவுரைகளைப் பின்பற்றி நடப்பதின் மூலமே நாம் நல் வாழ்வைப் பெறமுடியும்”

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ சாரதா நிலைய சேவாச்சிரமத்தில் நடைபெற்ற தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியின் சிறப்புவிழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை மனேஜர் திரு. கே. நடராஜா கேட்டுக்கொண்டார்.

கரணவாய் ஓவியர் திரு. கு. சிவசம்புவினுல் உருவாக்கப்பட்ட ஸ்ரீ சாரதாதேவியின் திருவுருவச்சிலை இவ் விழாவில் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

வட இந்துமகளிர் கல்லூரி மாணவிகளின் பஜனையும், திருமதி ராஜேஸ்வரி சோமசுந்தரத்தின் பக்திப் பாடல்களும், செல்வி கு. சந்திரகௌரியின் பேச்சும் இடம் பெற்றது. இதனையடுத்துத் திரு: வ. மாணிக்கவேல் இன்னிசைவிருந்தளித்தார் கலாவிநோதன் க. நா. கணபதிப்பிள்ளையின் வில்லுப்பாட்டும் நடைபெற்றது.

இவ்விழாவைப் பாராட்டிக்கல்கத்தா இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமிவிரேஸ்வரானந்தாஜி மகராஜ் வாழ்த்துச் செய்தி அனுப்பிவைத்திருந்தார். தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியின் சிறப்பு விழாமலரொன்றும் வெளியிடப்பட்டது.

## 10வருட கடூழியம்

காலி, திங்கள்

காலி அசைஸ் கோர்ட் இளைஞர் ஒருவருக்கு 10 வருட கடூழியச்சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. நீதியரசர் திரு: ஜி. பி. ஏ. சில்வா இத்தீர்ப்பை வழங்கினுர்.

ஜூரிசபையினர் எதிரியைக் கைமோசக் கொலைக் குற்றவாளியென ஏகமனதாகத்தெரிவித்தனர்.

வலஸ்முல்லையைச் சேர்ந்த 22 வயது இளைஞரான குணதாசா விஜய சிங்கா என்பவர் கத்தியால் குத்திக் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டி தொடரப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

இந்த உடல் மீதும், மற்ற வெளிப் பொருள்கள் மீதும் பற்றுதல் வைத்துள்ளவரையில், நாம் உண்மையான சாந்தியும், இன்பமும் அடையமுடியாது. நமக்குள்ளிருக்கும் உண்மைப் பொருளுடன் நம் மனம் லயப்படும்போதே இன்பமும் சாந்தியும் ஏற்படும். — சுவாமி ராமதாஸ்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம் 12-ந் திகதி (28-7-70)


## வெங்காயம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உற்பத்தியாகும் சின்னவெங்காயத்தை குடாநாட்டுக்கு வெளியே கொண்டுசென்று விற்பனை செய்வதற்கு இப்போதுள்ள ஆனையிறவுத் தடையை நீக்க வேண்டுமென்று ஆட்சிமன்றத்தில் நல்லூர்ப் பிரதிநிதி சமீபத்தில் கோரியிருந்தார் ஆனையிறவுத்தடை அவசியம்தான் என்று வடபகுதி விளைபொருள் உற்பத்தியாளர் சங்கம் கருத்துத் தெரிவித்திருந்தது. ஆனையிறவுத்தடை நீக்கப்பட வேண்டுமென்று வாசகநேயர் ஒருவர் பல காரணங்கள் காட்டி எழுதியிருந்த கடிதம் நேற்று 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்திருந்ததை வாசகநேயர் அறிவர்.

உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக்கம் சில வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டபோது உபஉணவுப் பொருள்களின் உற்பத்தியில் வடபகுதி விவசாயிகள் அதிக அக்கறை செலுத்தியதும் சின்னவெங்காயத்தில் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியுமென்ற நம்பிக்கையை ஏற்படுத்தியதும் நாடறிந்த விஷயம். சின்னவெங்காயம் ஒரு விளைபொருள். ஒரு குறிப்பிட்ட காலத்தில் வெங்காயத்தை ஒரு குறிப்பிட்ட காலத்தில் அதை அறுவடை செய்யவேண்டும். அறுவடை செய்த வெங்காயத்தை அதிக நாள் வைத்திருக்க முடியாது. உடனே சந்தைப் படுத்த முடியாவிட்டால் அது அழுகிவிடும்.

வடபகுதி விளைபொருள் உற்பத்திச்சங்கம்தான் விவசாயிகளிடமிருந்து வெங்காயத்தைக் கொள்முதல் செய்து வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்கிறது. தரமான வெங்காயத்தையே அனுப்ப வேண்டுமென்பதால் நல்ல வெங்காயத்தைத் தான் அது கொள்முதல் செய்யும். விளைவில்லாத பழுதுபடாமல் பாதுகாத்து வைப்பதற்கான வசதி விளைபொருள் உற்பத்திச்சங்கத்துக்குமில்லை; இப்பகுதி விவசாயிகளுக்குமில்லை, வெங்காய ஏற்றுமதியை சில தினங்களுக்கு நிறுத்தி வைக்கும்படி கொழும்பில் இருந்து தந்தி வந்தாலோ, வெங்காயம் அனுப்புவதற்கான ரயில் பெட்டி வசதிகள் கிடைக்காவிட்டாலோ வெங்காயம் உற்பத்திசெய்த விவசாயியின் நிலை என்ன?

ஆனையிறவுத்தடை சின்ன வெங்காயத்துக்கு அவசியம் தானா? இத் தடையை நீக்கிவிட்டால், கட்டுப்பாட்டுவிலை நிர்ணயிக்கப்பட்டுள்ள போது விவசாயி தான் உற்பத்தி செய்த வெங்காயத்தை உடனுக்குடன் சந்தைப் படுத்திவிடமுடியும். வீண் நஷ்டமும் ஏற்படாது.

இதேசமயம் தரகர்கள் விவசாயிகளுக்கும் பாவனையாளர்களுக்கும் நஷ்டத்தை ஏற்படுத்தித் தாங்கள் கஷ்டமில்லாமல் ஆதாயம் பெற முனைவர் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இது ஒருபுறமிருக்க ஆனையிறவுத் தடை அகற்றப்பட்டால் உள்ளூரில் உற்பத்தியாகும் சின்ன வெங்காயத்துக்கு உள்ளூரிலேயே தட்டுப்பாடு ஏற்படவும் வெளியூரில் சின்னவெங்காயத்தை மலிவாகப் பெற்று உள்ளூரில் பாவனைக்காக மீண்டும் இங்கு இறக்குமதிசெய்யக் கூடிய நிலையும் ஏற்படலாம். யாழ்ப்பாணக் குடாநாட்டில் உற்பத்தியாகும் சிறந்த மாம்பழங்கள், வாழைப் பழம், முருங்கைக்காய் போன்ற பொருள்கள் வெளியூர்களில் மலிவாகவும் தாராளமாகவும் கிடைக்கக் கூடியதாக இருப்பது இதற்குச் சான்று.

ஆனையிறவுத்தடை நீக்கப்பட்டால் சின்னவெங்காயத்துக்கும் இதேநிலை ஏற்படலாமென்று சிலர் அஞ்சுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். உள்

# புதிய அரசியல் திட்டத்தில்

# ஆட்சிமன்றமே உயர் அதிகாரபீடம்!

புதிய அரசியல் திட்டத்தில் ஆட்சிமன்றமே உயர் அதிகாரபீடமாக விளங்கும். நீதிமன்றங்கள் சுதந்திரம் உடையனவாக இயங்கும். ஆனால் ஆட்சிமன்றச் செயல்களை இது கட்டுப்படுத்தாது. இந்தவகையில் இலங்கை ஆட்சிமன்றம், பிரித்தானிய காமன்ஸ்சபையைப் போன்றதாகும்.

ஆட்சிமன்றப் பிரதிநிதிகள், அரசியல் நிர்ணயசபையாக இயங்குவதற்குத் தீர்மானிப்பதற்காகப் பிரதமர் விடுத்த அழைப்பின்மீது நடந்த மூன்று நாள் விவாதத்தில் இது தெரியவந்தது.

சுதந்திர நீதிமன்றம் என்பதினால் நீதிமன்றத்தின் உயர் தன்மையைத் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட சபையிலேயே உயர்ந்த அதிகாரம் இருக்கும் எனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசியும், வீடமைப்பு அமைச்சருமான திரு. பீட்டர் கெனமன் அரசாங்கத்தின் கொள்கையைத் தெளிவாக வெளிப்படுத்தினார் மற்றும் அரசியல் நிர்ணயசபை பற்றிய அம்சங்கள் ஜூலை 29ந் திகதி சமர்ப்பிக்கப்படவிருக்கும் புதிய அரசியல் திட்டத்தில் இருக்கும்.

ஜனநாயக சோஷலிசத்தை அமைப்பதற்கு இலங்கையை ஒரு சுதந்திரமான, சுயாட்சியான, சுயாதீனமான ஸ்ரீலங்கா குடியரசாகப் பிரகடனப்படுத்துவதற்கும், புதிய அரசியல் திட்டத்தை ஆக்குவதற்குமான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்ட இவ்விடயத்தை ஆட்சிமன்ற உறுப்பினர்கள் யாவரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

ஜூலை 19ந்திகதி பிரதமர் இத் தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசுகையில், புதிய அரசியல் திட்டத்தை உருவாக்குவதற்கு அங்கத்தவர்கள் யாவரும் தங்களுடைய பலதிறப்பட்ட கருத்துக்களையும் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்புண்டு என்று கூறினார். சிங்களவர், தமிழர், சோனகர், பறங்கியர் எனப் பல இனங்களாக இருந்தாலும் பல மதத்தையுடையவர்கள் இருந்தாலும் இலங்கையர் யாவரும் ஒரு நாட்டவர் என்ற உணர்வுடையவராய் விளங்கப் புதிய அரசியல் திட்டம் வழிவகுக்க வேண்டுமென மேலும் அவர் கூறினார்.

எமது அரசியல் திட்டம், ஒரு சோஷலிச நாடாக ஸ்ரீலங்காவை உருவாக்க வேண்டுமென்ற மக்களின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வதாய் இருக்கவேண்டும். எமது அரசியல் திட்டம் எமது சுதந்திரத்தையும், சுயாதீனத்தையும், சுயாட்சியையும் பாதுகாக்கவேண்டுமென்று அவர் தெரிவித்தார்.

மூன்று ஐக்கிய முன்னணிக் கட்சிகளது பிரதிநிதிகளின் அங்கீகாரத்தைப் பெற்ற அரசியல் திட்ட நகல் தயாராக இருப்பதாக அவதானிகள் கருதுகிறார்கள்.

அரசாங்க அங்கத்தவர்களும், அரசியல் திட்ட அமைச்சு வட்டாரங்களும் இக்கருத்தை ஊர்ஜிதப் படுத்துவதாய் இருக்கிறார்கள்.

அரசியல் நிர்ணயசபையில் தீர்மானத்தை யொட்டிய விவாதத்தில் அரசியல் திட்ட விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டீ சில்வா பேசுகையில் இரண்டு வருடத்திற்கு முன்பிருந்தே அரசியல் திட்டம் பற்றி ஐக்கிய முன்னணிக் கட்சியினர் யோசித்துவருகிறார்கள். அதை யொட்டி முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் அரசியல் நிர்ணயசபை முன் தாக்கல் செய்வதற்கு ஏற்கனவே தயாரிக்கப்பட்ட அரசியல் திட்டம் எதுவும் கிடையாதென்றார்.

இச்சபை விரைவில் தனது கடமையை பூர்த்திசெய்துவிடுமென்று அரசாங்கம் நம்புவதில்... ஒரு நகல் திட்டம் இருக்கத்... செய்கிறதென்பது புலனாகும்.

குடியரசை நிறுவுவதற்கும் பிரித்தானிய இராணியின் அதிகாரத்திலிருந்து விலகுவதற்கும், செனட்சபையை ஒழிப்பதற்கும், சுயாதீன நீதிமன்றங்களைக் காப்பதற்கும் இலங்கை நீதிமன்றமே இறுதித் தீர்ப்பை அளிப்பதாக இருக்கவேண்டும் என்பதற்கும் எல்லா அங்கத்தவர்களும் ஆதரவு தெரிவித்தனர்.

## சி. பி. ஏ. - விமர்சனம் -

ஆனால் அடிப்படை உரிமைகள், புதிய அரசியல் திட்டத்திலேயே அமைப்பதா அல்லது தனிச் சரத்தாகச் சேர்ப்பதா? இலங்கை குடியரசாக இருந்துகொண்டே காமன்வெல்த்தில் தொடர்ந்திருப்பதா? எதிர்காலத்தில் கட்சியமைப்பு முறை ஆகியவை பற்றி வேறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இவையும் மற்றுமுள்ள பல்வேறு விடயங்களும், சபை அங்கத்தவர்களால் தீவிரமாக ஆராயப்படும் என்பதில் சந்தேகமில்லை.

அரசியல் நிர்ணயசபை கூடுமிடம் பிரதிநிதிகள் சபையாகவே இருக்கும். தலைவர் திரு. ஸ்ரான்லி திலகரத்ன அல்லது அவரது துணையாளர் ஜனாப் ஐ. ஏ. காதர் தலைமையில் நடைபெறும்.

அரசியல் நிர்ணயசபை தனது வேலைகள் யாவற்றையும் பூர்த்தி செய்தவுடன், இலங்கையின் பெயர், ஸ்ரீலங்கா என்ற அதன் பழைய பெயரிலேயே அழைக்கப்படும் பிரித்தானிய முடியாட்சி அரசியல்திட்டத்திலிருந்து நாடு பிரிந்து சோஷலிசக் குடியரசாகும். இருசபைகள் மறைந்து (செனட் அழிக்கப்பட்டு) ஒரேசபையாகும். எல்லா அரசியல் கிளைகளிலும் மேலாக ஆட்சிமன்றம் உயர் அதிசக்தியுடையதாக இருக்கும். மகாராணியின் பிரதிநிதியாக விளங்குப் மகாதேசாதிபதி பதவி நீக்கப்பட்டு, அரசியல் தலைவராக புதிய ஜனாதிபதி தெரிவுசெய்யப்படுவார். இதுவரை காலமும் கடைசி அப்பீல் மன்றமாகவிளங்கிய பிரிவுக்கவுன்சிலுக்கு பதிலாக சுப்பிறீம்கவுன்சில் அமைக்கப்படும்.

டாக்டர் டீ சில்வா குறிப்பிடுவதுபோல புதிய அரசியல் திட்டம் பழமையை முற்றாக விட்டு நீங்கியதாக இருக்கும். பொது நிர்வாக அமைச்சரும், பிரதமரின் மருமகனுமான திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கூறியதுபோல்மக்களுடைய வாழ்வுக்குரிய உரிமைகளுக்கும் நாட்டின் முன்னேற்றச் செயல்களில் மக்களுக்கு சந்தர்ப்பம் கொடுப்பதாக விளங்கும்.

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவின் 72-வது வயது நிறைவுவிழாவான 1971-ம் ஆண்டு ஜனவரி 8-ந்திகதி அல்லதுகண்டியரசனுக்கும் ஆங்கிலேயருக்கும் கிடையில் கைச்சாச்திடப்பட்ட உடன்படிக்கையின் (1815) 156-ம் ஆண்டு தினத்தில் புதிய அரசியல் திட்டத்தின் ஆரம்பவிழா நடைபெறும் சாத்தியக் கூறுகள் உண்டு.

கண்டிய ஒப்பந்தம் கைச்சாத்திட்ட இடமான பண்டைய கண்டியரசரின் சபா மண்டபத்தில் புதிய அரசியல் திட்ட ஆரம்பவிழா நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

திருமதி பண்டாரநாயக்காவே முதலாவது ஜனாதிபதியாக அறிவிக்கப்படலாம் என்று உறுதியாக கருதப்படுகின்றது.

(சி பி ஏ)

## ஜெயராஜன் எழுதுவது:

பேராதனை பல்கலைக் களகத்திலே இம்முறையும் 150 மாணவர்களைத்தான் இஞ்சினீரிங் வகுப்புக்குத் தெரிவு செய்யப் போகிறார்களாம். இச்செய்தியை வெளியிட்டுள்ள ஒரு கொழும்புப் பத்திரிகை, 100-க்கு மேற்பட்ட 'தமிழ் மாணவர்கள்' சென்ற டிசம்பர் மாதம் நடந்த பரீட்சையின் பெறுபேறாக, இஞ்சினிரிங் வகுப்பில் சேர தகுதி பெற்றிருக்கிறார்கள் என்று எழுதியுள்ளதுடன், "யாழ்ப்பாணத்திலுள்ள இருபள்ளிக்கூடங்களிலிருந்து மட்டும் 30 மாணவர்கள் இவ்விதம் தகுதி பெற்றுள்ளனர். யாழ்ப்பாண இந்துக் கல்லூரி 16 ஹாட்லி கல்லூரி 14" என்று குறிப்பிட்டுள்ளது.

மேலெழுந்த வாரியாகப் பார்ப்பவர்களுக்கு இச் செய்தி சாதாரணமாகத் தோன்றலாம். ஆனால் நாடு இன்றுள்ள சூழ்நிலையை கவனிக்கும் போது, வகுப்புவாதத்தைத் தூண்டிவிடும் முறையிலேயே இச் செய்தி உள்ளதென்பதை உணரக் கூடும்.

பரீட்சையில் தேறியுள்ள மாணவர்களில் தமிழரே அதிகமானவர் என்பதை குறிப்பிட வேண்டிய அவசியமென்ன? தேசிய ஒற்றுமையை பிரதமர் வற்புறுத்தும் இச்சமயத்தில் இவ்விதமான முறையில் செய்திகளை வெளியிடுவது, அந்த நோக்கத்துக்கு உதவி செய்யாது. இதற்கு மாறாக, வகுப்புவாதத்தைக் கிளப்பிவிட்டு, தகுதியுள்ள மாணவர்களையும் சங்கடத்தில் உள்ளாக்குவதாக இருக்கும்.

இது அந்தப் பத்திரிகைக்காரருக்குத் தெரியாதிருக்க முடியாது.

மாணவர்களை 'தமிழர்' என்றுதனியாகப்பிரித்துஎழுவேண்டிய காரணமென்ன? நாட்டிலே வகுப்புவாதம், இனத்துவேஷம் முதலியவற்றை சில அரசியல் வாதிகள் கிளப்பி விடுகிறார்கள் என்று எண்ணியிருந்தேன். ஆனால் உண்மையில் பத்திரிகைக் காரர்களே இதற்கு காரணம் என்பதை மிக வருத்தத்துடன் கூறவேண்டியுள்ளது. அரசியல் வாதிகளின் வகுப்புத் துவேஷ கருத்துக்களையெல்லாம் சில பத்திரிகைகள் தானே வெளியிட்டு, பொதுமக்களிடையே அந்த விஷத்தைப் இந்த விஷமம் இனியும் நடைபெறாமல் தடுக்க, என்ன செய்யலாம்? பத்திரிகை கவுன்ஸில் சீக்கிரத்தில் ஏற்பட்டாவது இந்த வகுப்புவாதக் கருத்துக்கள் பரவுவது குறையுமா?

0 0 0

ஈழத்திலுள்ள ஆயுர்வேத மூலிகைகளைப் பரீட்சை செய்து பார்த்து, அதனால் நீரழிவு, இதயநோய், இரத்த அழுக்கம் முதலியவை குணமாகியுள்ளதாக கிழக்கு ஜேர்மனி வைத்திய நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கிறார்களாம்.

இதைப் பற்றி மேலும் நேரில்வந்து ஆராய்ச்சி செய்ய, ஜெர்மன் வைத்திய கோஷ்டியினர் இங்கு சீக்கிரத்தில் வர இருப்பதாகவும், அவர்கள் இதற்காக சமஸ்கிருதம், தமிழ் இவற்றைக் கற்று வருவதாகவும் ஒரு செய்தி தெரிவிக்கின்றது.

ஜெர்மனியர் இங்கு வந்து நமது மூலிகைகளை ஆராய்வதால், இம்மூலிகைகளுக்கு வெளி நாடுகளில் அதிக கிராக்கி ஏற்பட்டு, அந்த ஏற்றுமதியினால் நமக்கு அந்நியச் செலாவணி கிடைக்குமென்று ஆயுர்வேத இலாகா நம்பி இருப்பதாக ஒரு பத்திரிகை தெரிவிக்கின்றது.

நமது மகிமை நமக்குத் தெரியாது. மேலைநாட்டினர் பாராட்டும் போதுதான் அது விளங்கும், நமது மூலிகைகளால் அவ்வளவு நல்ல பயன் கிடைப்பதாயின், ஏன் வெளிநாடுகளிலிருந்து நாம் அதிக விலை கொடுத்து பல மருந்துகளையும் வாங்க வேண்டும்? நமது மூலிகைகளைக் கொண்டே, பல மருந்துகளைச் சரிக்கட்டி மேலைநாட்டினர் அதை நமக்கே பலமடங்கு அதிக விலைக்கு விற்கக்கூடும்! நாம் மூலிகைகளாக அனுப்புவதைவிட, மருந்துகளையே நவீனமுறையில் தயாரித்து அனுப்பி நல்ல லாபம்பெற முடியாதா?

0 0 0

வஞ்சமின்றி வணங்குமின்
வைகலும்,
வெஞ்சொலின்றி விலகுமின்
வீடுற,
நெஞ்சு நெஞ்சு நின்றுள்
குளிர் வார்க்கெலாம்,
அஞ்சலென்றிடும் ஆனைக்கா
அண்ணனே.

— அப்பர் அடிகள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

செய்து வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்கிறது. தரமான வெங்காயத்தையே அனுப்ப வேண்டுமென்பதால் நல்ல வெங்காயத்தைத் தான் அது கொள்முதல் செய்யும். விளைவில்லாத வெங்காயத்தைச் சங்கம் கொள்முதல் செய்யாது. இதுதவிர நிறை விஷயமாக சங்கடங்கள் விவசாயிகளுக்கு ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது. வெங்காயம் ... கூடியதாக இருப்பது இதற்குச் சான்று.

ஆனையிறவுத்தடை நீக்கப்பட்டால் சின்னவெங்காயத்துக்கும் இதேநிலை ஏற்படலாமென்று சிலர் அஞ்சுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். உள்ளூர்த்தேவைகளுக்குப்போக மீதியையே உடனுக்குடன் சந்தைப்படுத்துவதென விவசாயிகளும் விற்பனையாளர்களும் தீர்மானித்தால் இந்தச் சங்கடம் நேராது.

தங்களுடைய பலதிறப்பட்ட கருத்துக்களையும் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்புண்டு என்று கூறினர். சிங்களவர், தமிழர், சோனகர், பறங்கியர் எனப் பல இனங்களாக இருந்தாலும் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் என

...என்றார்.

இச்சபை விரைவில் தனது கடமையை பூர்த்திசெய்து விடுமென்று அரசாங்கம் நம்புவதிலிருந்து ஏதோ ஒரு நகல் திட்டம் இருக்கத்தான்செய்கிறதென்பது புலனாகும்.

சுயாட்சியான சோஷலிசக்

நாடு பிரிந்து சோஷலிசக் குடியரசாகும். இருசபைகள் மறைந்து (செனட் அழிக்கப்பட்டு) ஒரேசபையாகும். எல்லா அரசியல் கிளைகளிலும் மேலாக ஆட்சிமன்றம் உயர் அதிசக்தியுடையதாக

திருமதி பண்டாரநாயக்காவே முதலாவது ஜனாதிபதியாக அறிவிக்கப்படலாம் என்று உறுதியாக கருதப்படுகின்றது.

(சி பி ஏ)

காரணம் என்பதை மிக வருத்தத்துடன் கூறவேண்டியுள்ளது. அரசியல் வாதிகளின் வகுப்புத் துவேஷ கருத்துக்களையெல்லாம் சில பத்திரிகைகள் தானே வெளியிட்டு, பொதுமக்களிடையே அந்த விஷத்தைப் பரப்பியுள்ளன.

...வைகலும்,
வெஞ்சொலின்றி விலகுமின்
விடுற.
நைஞ்சு நைஞ்சு நின்றுள்
குளிர் வார்க்கெலாம்,
அஞ்சலென்றிடும் ஆனைக்கா
அண்ணனே.
— அப்பர் அடிகள்.

## உல்லாசப்பிரயாணம்

உல்லாசப்பிரயாணத் தொழிலின் அபிவிருத்தியில் தனியார் துறையினரின் பங்கு என்ன என்பது பற்றி உல்லாசப்பிரயாணத்துறை அமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகல்ல விரைவில் விபரமான விளக்க அறிக்கையொன்றை வெளியிடுவாரென்றும் இதற்கு முன் பிரதமருடன் கலந்தாலோசனை செய்வாரென்றும் ஒரு செய்தி கூறுகிறது. உல்லாசப் பிரயாணத்தை விருத்தி செய்வதில் அரசாங்கமே முக்கிய பங்கு வகிக்குமென்பதற்கான அறிகுறிகள் தென்படுவதாகவும் அதே செய்தி தெரிவிக்கிறது.

உல்லாசப்பிரயாணத்தின் மூலம் நாட்டின் வருமானம் வெகுவாக அதிகரிக்க முடியும். அயல் நாடான இந்தியா உல்லாசப் பிரயாணிகள் மூலம் பெருந்தொகைப் பணத்தை வருமானமாகப் பெறுகிறது. நமது நாடும் கூட சில வருடங்களுக்கு முன்னிருந்ததைவிட இப்போது உல்லாசப் பிரயாணிகளால் சிறிதளவு அதிக வருமானம் பெறுகிறது. இன்னும் இத்தொழிலை சரியான முறையில் விருத்தி செய்தால் அதிக வருமானம் கிடைக்க முடியும்.

கண்டியும், நுவரேலியாவும், பழைய கட்டிடங்களின் சிதைவுகளுமுள்ள அநுராதபுரமும் தான் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளைக் கவர முடியுமென்பதல்ல. திருக்கோணமலைக் கன்னியாய வெந்நீரூற்றுக்களும் மட்டக்களப்பு கற்குடா கடற்கரையும் யாழ்ப்பாணத்து கீரிமலை, நயினாதீவு, நெடுந்தீவு முதலிய சிறு சிறு தீவுகளும் தமது இயற்கை வனப்பினால் உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்திருக்க முடியும். அவர்கள் வசதியாகத் தங்கியிருக்கவும் விரும்பிய உணவு கிடைக்கவும் சிறந்த ஹோட்டல், விடுதி வசதிகள் இருக்க வேண்டியது அவசியம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உல்லாசப் பிரயாணிகளைக் கவரக்கூடிய இடங்கள் நிறைய இருக்கின்றன. வெளிநாட்டுப் பிரயாணிகளை மட்டுமல்ல உள்ளூர்ப் பிரயாணிகளையும் கூட இவை கவரவேண்டும். பிரதமரைச் சந்தித்து ஆலோசனை செய்வதற்கு முன்னர் உல்லாசப் பிரயாணத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் கலுகல்ல யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வந்து இந்த இடங்களைப் பார்வையிடுவது பயன் தரும்.

# பதினொரு பாடசாலைகளில் தலைமை ஆசிரியர் இல்லையாம்!

பூநகரி, திங்கள்

பூநகரி பகுதியிலுள்ள பதினான்கு பாடசாலைகளில் பதினொரு பாடசாலைகள் தலைமைஆசிரியர்கள் இல்லாமல் இயங்குகின்றனவாம். கௌதாரிமுனை என்ற கிராமத்திலுள்ள ஒரு பாடசாலை ஆசிரியர்களில்லாதகாரணத்தால் மூடப்பட்டிருக்கிறதாம்.

இக்குறைபாடுகளை கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரிக்கு சுட்டிக்காட்டி வெகுவிரைவில் அவரோடு பூநகரிப் பெற்றோர்கள் அடங்கிய தூதுகோஷ்டி ஒன்று கல்வி அதிகாரியைச் சந்தித்து நேரில் குறைகளைக் கூறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கோண்டாவில் இ. போ. ச. டிப்போ தொழிலாளர் கமிட்டி

நல்லூர், திங்கள்

கோண்டாவில் இ. போ. ச. பஸ் டிப்போவில் பன்னிரண்டுபேர் கொண்ட தொழிலாளர் கமிட்டி தெரிவுசெய்யப்பட்டுள்ளது. கம்யூனிஸ்ட் (மாஸ்கோ சார்பு) கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, சமசமாஜக்கட்சி, தமிழரசுக்கட்சி ஆகிய நான்கு கட்சிகளினதும் ஆதரவில் இயங்கும் ஒவ்வொரு யூனியன்களிலிருந்தும் மூன்று பேர் தொழிலாளர் கமிட்டியில் அங்கம் வகிக்கின்றனர்.

தொழிலாளர் கமிட்டியின் தலைவராக கம்யூனிஸ்ட்கட்சியின் ஆதரவிலான யூனியனைச் சேர்ந்த திரு. கே. இரத்தினம் தெரிவுசெய்யப்பட்டார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவிலான யூனியனைச் சேர்ந்த திரு. ரி. ரஞ்சன் உபதலைவராகவும், தமிழரசுக்கட்சி ஆதரவிலான யூனியனைச் சேர்ந்த திரு ஆர். பீதாம்பரம் காரியதரிசியாகவும், சமசமாஜக் கட்சி ஆதரவிலான திரு என் நாகராசா உபகாரியதரிசியாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

டிப்போ அதியட்சர் திரு வி சுவாம்பிள்ளை தலைமையில் தொழிலாளர் கமிட்டி தெரிவு நடந்தது. எமது டிப்போவில் அநேக பஸ்களை உதிரிப் பாகங்கள் இல்லாமல் சேவையில் ஈடுபடுத்த முடியாமலிருக்கிறது. இந்த நிலையை மாற்றி அமைக்க தலைமை அலுவலகத்துடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு சேவையிலீடுபடாமலிருக்கும் பஸ்களை திருத்தி அமைத்து சேவையிலீடுபடுத்தவேண்டும் இதற்கு எல்லாத் தொழிலாளர்களும் எவ்வித பாகுபாடுமின்றி அயராது ஒத்துழைக்கவேண்டும்' என்று டிப்போ அத்தியட்சர் திரு சுவாம்பிள்ளை தொழிலாளர்களுக்குவிடுத்த வேண்டுகோளை தொழிலாளர் ஏகமனதாக ஏற்றனர்.

## லெஸ்லி ...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

களுக்குசெல்லவேண்டியிருப்பதால் அவர்களுக்கு ஒழுங்காக பஸ் பிரயாணவசதியளிக்கப்படவேண்டுமென்றும் அவர் மேலும் கூறினர்

மாவட்ட இணைப்புக் குழு தலைவர் திரு. ஜே. எம் சபாரத்தினம், போக்கு வரத்து அமைச்சருக்கு பஸ் சேவையின் அவசியத்தை எடுத்துக் கூறி போதிய பஸ்கள் பெற முயற்சிக்கப்படுமெனக் கூறினர்.

காரைதீவு கிராம சபை என்பதை காரைநகர் என்று மாற்றவேண்டும் என வட்டுக்கோட்டை எம் பி கேட்டுக்கொண்டார். இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படுமென்றுதெரிவிக்கப்பட்டது.

(கு. வி. ம.)

# பாடசாலை ஊழியர்சங்க 12 அம்ச மகஜர்

## நிரந்தரக் காரியதரிசியிடம் தூதுக்குழு சமர்ப்பித்தது

யாழ்ப்பாணம், செவ்

பாடசாலை ஊழியர் சங்கத்தின் தூதுக்குழுவொன்று நியமன எம். பி திரு எம் சி. சுப்பிரமணியம் தலைமையில் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி டாக்டர் பி. உடாகமவைச் சந்தித்து பன்னிரண்டு அம்ச மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தது

ஐம்பத்தைந்து வயதை அடைந்துள்ளஊழியர்களைத் தொடர்ந்தும் சேவையில் வைத்திருக்கவேண்டும். அல்லது அவர்களது பழைய சேவைக்காலம் சேர்க்கப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு கல்வி அமைச்சு இதுவிஷயமாக முடிவெடுக்கும் இப்பொழுது தாம் கவனிப்பதாக நிரந்தரக் காரியதரிசி கூறினர்.

இனிமேல் நவடபெறும் அரசாங்க எழுதுவினைஞர் பரீட்சைகளுக்குபாடசாலைச் சிற்றூழியர்கள் தோற்றக்கூடியதாகச் செய்வதாக அவர் உறுதியளித்தார்.

விஞ்ஞான ஆய்வுகூட ஊழியர்களின் தரத்தை உயர்த்துவதற்கு கல்வி அமைச்சு இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென முறையீடப்பட்டதற்கு தராதரமுடைய ஊழியர்களைத் தரமுயர்த்துவதற்கு வழிவகை செய்யப்படுவதாகத் தெரிவித்தார்.

பாடசாலைகளில் கணக்காளர் பதிவாளர் பதவிகள் புதிதாக இருக்கமாட்டாதென்றும் அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் பாடசாலை எழுதுவினைஞர்களைச் சேர்ப்பதற்குத் தாம்சிபார்சு செய்வதாகவும் நிரந்தரக் காரியதரிசி தெரிவித்தார்

பாடசாலை நூலகங்களுக்கு நியமனங்கள் செய்யும்பொழுது பயிற்றப்பட்ட நூலகர்களே நியமிக்கப்படுவார்களென்றும் உத்தியோக மொழியிலிருந்து விலக்களிக்கும் விஷயத்தைம் பொது நிர்வாக அமைச்சின்கவனத்திற்குக் கொண்டுவருவதாகவும் டாக்டர் உடாகம் சொன்னர். தூதுக்குழுவில் திருவாளர்கள்கா. மாணிக்கவாசகர், ஜே. ஐ சம்பிராசா. க. நவரத்தினம், உட்பட தய்ச்சங்கத்தின் செயற்குழு அங்கத்தவர்களும் இடம்பெற்றனர்

## சூதாடியவர் கைது

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன்துறைபொலிஸ் குற்றத்தடுப்பு இன்ஸ்பெக்டர் திரு. கணேசன் தலைமையின்ல் சென்ற பொலிஸ் கோஷ்டி ஒன்று வசாவிளானில்உள்ள வீடுஒன்றில் திடீர் வேட்டை நடாத்தியபோது சூது விளையாடிக்கொண்டிருந்த ஐவரும் இவர்களிடம் சிக்கிக்கொண்டனர். இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்யப்படும்.

## கொலை வழக்கு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவு பஸ் கண்டக்டர் துரைராசா குமுளமுனையில் வைத்துக் கொலை செய்யப்பட்டதாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு. திசநாயக்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது எதிரிகள் சார்பில் ஆஜராக திரு. ஜிஜி பொன்னம்பலம்கோர்ட்டிற்கு வராததால் நீதிபதி வழக்கை அடுத்த மாதம் 3-ந் திகதிக்கு ஒத்திவைத்து எதிரிகளான குமுளமுனையைச் சேர்ந்த மயில்வாகனம் தியாகராசா, வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம் ஆகியோரை அடுத்த மாதம் 3-ந் திகதி வரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

## ஆயுள்வேத டாக்டர் தற்கொலை!

பூநகரி, திங்கள்

கிராமசபை ஆயுள்வேத வைத்தியசாலையில் டாக்டராக கடமையாற்றியவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

கரைச்சிக் கிராமசபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வட்டக்கச்சி ஆயுள்வேத வைத்தியசாலையில்கடமையாற்றிய சுப்பிரமணியம் விநாயகமூர்த்தி (28-வயது) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

"என்னுடைய மரணத்துக்கு நானே காரணம் ஒருவர் மீதும் சந்தேகப்படவேண்டாம்" என்று அவர் கை பட எழுதப்பட்ட கடிதம் மரணவிசாரணையில் சமர்ப்பிக்கப்பட்டது.

கிளிநொச்சி பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எம், யோகலிங்கம் மரணவிசாரணை நடாத்தினர். தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# சைகோனில் இந்தியத் தூதரகம் தாக்கப்பட்டது

சைகோன், ஜூலை 27

தென்வியட்நாம் தலைநகரான சைகோன் மத்தியிலுள்ள பாரத தூதரகத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கினர். தென்வியட்னும் புரட்சி அரசின் வெளிநாட்டமைச்சர் தி பின்னை இந்தியாவில் வரவேற்பதை ஆட்சேபித்தே இவ்வார்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் இந்தியத்தூதரகக்காரர்களையும்மற்றும் வாகனங்களையும் சேதப்படுத்த முயன்றனர் கான்சலக அதிகாரிகள் கட்டிடத்துக்குள்ளேயே இருந்தனர் சுமார் 15 நிமிட நேரம் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தை பொலிஸார் கண்ணீர்புகைக்குண்டுகளைப் பாவித்து ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்தனர்.

# ஊர்காவற்றுறை பாடசாலை அதிபர்கள் கூட்டம்

அல்லைப்பிட்டி, திங்கள்

ஊர்காவற்துறைத் தொகுதியிலுள்ள மத்திய மகாவித்தியாலயத்தினதும், மகாவித்தியாலயங்களினதும் அதிபர்கள் கூட்டம் வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது, இக் கூட்டத்தில்வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. வே. சங்கரலிங்கம் தீவுப்பகுதி வட்டார கல்வி அதிகாரி திரு. ஏ. எஸ். நல்லையா காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில் திரு. கா. பொ. இரத்தினம் எம். பி. பேசுகையில் சென்ற க. பொ. த பரீட்சையின் பெறுபேறுகள் திருப்தியாக இருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டியதுடன் சில வித்தியாலயங்களில் ஆங்கிலத்தில் ஒருவருமே சித்தி அடையவில்லையெனவும் ஒரு மகாவித்தியாலயத்தில் தமிழ்ப்பாடத்தில் நூற்றுக்கு நூறு வீதம் சித்தி அடைந்துள்ளார் என்பதையும் சுட்டிக்காட்டி இனிமேல் வரும் பரீட்சைகளில் மாணவர்கள் திறமையாக சித்தி அடைவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்,

வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு, வே. சங்கரலிங்கம் பேசுகையில்:- க. பொ, த, பரீட்சைக்கு இரண்டு முறை தோற்றிய மாணவர்கள் அப்பாடசாலையில் மூன்றும் தரம் படிக்கலாமென்ற கல்வி அமைச்சின் புதிய உத்தரவை விளக்கி கூறியதுடன் தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்களை அனுப்பியிருந்தாலும் அவர்களையும் பாடசாலையில் சேர்ந்து கற்பிக்கலாமெனவும்சொன்னர் ஒவ்வொரு கல்லூரி அதிபர்களும் தாங்கள, தாங்கள வித்தியாலயங்களுக்குத் தேவையான ஆசிரியர்கள கட்டட வசதிகள பற்றி கல்விப்பணிப்பாளரோடும் எம், பி யுடனும் கலந்துரையாடினர்,

## திருமதி கெனமன் ரஷ்யா பயணம்

கோட்டை, திங்கள்

நேற்று முன்தினம் வீடமைப்பு அமைச்சர் திரு பீட்டர்கெனமனின் துணைவியார் திருமதி மவுதேகெனமன் மருத்துவ சிகிச்சைக்காக சோவித் ரஷ்யாவுக்கு சென்றுள்ளார்

## கம்யூனிஸ்ட் வா. மு. தீர்மானம்

மாவிட்டபுரம், திங்கள்

இணுவில் கம்யூனிஸ்ட் வாலிப முன்னணி, பிரதமர் திருமதி சிறிமாவையும் கம்யூனிஸ்ட்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. பீட்டர் கெனமனையும் அழைப்பதெனத் தீர்மானித்தது.

கொழும்பு, திங்கள்

பிரதமர் ஸ்ரீமா பண்டாரநாயக்காவின் புதல்வி செல்வி சந்திரிகா பண்டாரநாயகா அரசியல் விஞ்ஞானத்துறையில் விசேஷ பட்டம் பெற்றுள்ளார். இவர் தற்போது சோபோன் பல்கலைக்கழகத்தில் பயின்று வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org